அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

-Page - 53-

மலர்: 16
இதழ்: 2

குரோதி ஞு வைகாசி மீ
மே—ஜூன் மீ 1964

வருட சந்தா ரூ. 3-00.

ACC NO. 9886

பழி அஞ்சிய திருவிளையாடல்.

சித்திர விளக்கம் 26. பக்கம்: 53.

பொருளடக்கம்

		பக்கம்
1.	வள்ளியும், சபரியும் (திருப்புகழ்மணி) ...	49
2.	பழி அஞ்சியது (கி. வா. ஜகந்நாதன்) ...	53
3.	கருவூரார் (ரஸபதி) ...	58
4.	குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ...	69
5.	அருணகிரிநாத சுவாமிகள் புராணம் (தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.)	72
6.	நீயே சாக்ஷி ஐயப்பா (அன்பன்) ...	75
7.	முருகன் அடியும் முடியும் (கி. வா. ஜ.) ...	82
8.	'அகரமுத லெனவுரைசெய்' திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ...	86
9.	Beatitude of benediction and graco, and parallelism of might and prowess (*Thiruppugal Mani*)	93

Grams: MURSOKS. Phone: 51388

"நானுனை விட்டிடாமே, உலோகித
பத்ம சீர்பாதம் நீ இனி வந்து தாராய் !"

வெண்மையான சலவைக்கு

ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர்: D. பங்காரு செட்டியார்,
நேஷனல் இன்டஸ்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 16	குரோதி ௵ வைகாசி ௴ மே—ஜூன் 1964	இதழ் 2

வள்ளியும் சபரியும்—தொடர்ச்சி.

(திருப்புகழ்மணி)

பக்தர்களிடம் தணியாத மோகமாம் முருகனுக்கு. "அதிமோக தயாபரன்" என்றசொல், அன்பர்களிடத்தில் பகவானுக்கிருக்கும் காதலை யுணர்த்துகிறது. இராமனுக்கு சீதையிடம் அதிக ப்ரியமுண்டு. தண்டகாரணியத்தில் ரிஷிகளுககு ராவணவதம செய்வதாக சத்யம் செய்தார். அப்பொழுது சீதை, இராவணன் உமக்குக் கெடுதல் செய்யவில்லையே. ஏன் அவனைக் கொல்ல வேண்டும் என்று கேட்டாள். அதற்கு இராமன், சீதா! உன்னை விட்டாலும் விடுவேன். என் பக்தர்களாகிய சாதுக்களைக் கைவிடமாட்டேன் என்றானும். சீதையைப் பிரிந்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்த ராமன் தன் காருண்யத்தைச் சபரி மூலமாய் நிலைகாட்டி விட்டான். லக்ஷ்மணா! எதை விட்டாலும் விடலாம்; கருணையைமட்டும் விடக்கூடா

காவிய வெள்ளம் கரைபுரளல போல,உயரத்
தாவும் தவத்தர் தரமுணர்ந்து கொள்வோமே.

தப்பா" என்று வேடப் பெண்ணான சபரியைத் தேடிக் கொண்டு சென்றான். அவள் ருசிபார்த்துக் கொடுத்த எச்சில் கனியை உண்டான். நான் என்று மார்தட்டும் அகங்காரிகளின் வாயில் ஊறுவதுதான் எச்சில்; ஆனால் பகவானுடைய நாமத்தை எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருப்பவரின் வாயிலூறுவது கங்கை நீர். நாவிலூறும் நீரில் பகவானுடைய நாமம் படும்பொழுது கங்கையாய் விடுகிறது. இதை வள்ளலார் "குறவர் குடிசை நுழைந்தாண்டி, அந்தக் கோமாட்டி யெச்சில் விழைந்தாண்டி" என்றார். இதற்கு, குடிசை யொன்றிருந்தது. அதிலொரு பெண் இருந்தாள். அவள் எச்சிலை வாங்கி யுண்டான் முருகன் என்பது பொருளல்ல; உடல்களெல்லாம் ஜீவன் குடியிருக்கும் குடிசை. உலகத்தில் இவ்வாறு உடலிலும், பிறப்பிலும் வேறுபட்ட பலவகைக் குடிசைக ளிருக்கின்றன. அவற்றை நாய்க்குடிசை, புலிக்குடிசை, மனிதக் குடிசை யென்றும், அந்தணர் குடிசை, அரசர் குடிசை, சூத்திரக் குடிசையென்றும் பலவகையாகக் கூறுவர். இவையனைத்தும் சரீர பேதத்தா லுண்டானவை. குறக்குடியில் தோன்றிய சரீரமே குறவர் குடிசை. அந்தக் குடிசையாகிய சரீரத்திலிருந்து கொண்டு முருகாவென்று சொல்லிக் கொண்டிருந்தாள் வள்ளி. அந்த நாமத்தின் மூலமாய் அவள் உள் நுழைந்து விட்டான் முருகன் என்பதே இதன் கருத்து. எந்தக் குடியில் பிறந்தாலும் பக்தர் களுக்குள் வேற்றுமை கிடையாது. அனைவருள்ளும்

வானோக்கி மண்ணோக்கி, மாதிசைகள் நோக்கி,மதி தானோக்கி ஞானிகள்தாம் தற்பரனை எண்ணுவரே.

பகவான் புகுந்து விடுகிறான். அதேபோல் இராமன் சபரியிடம் சென்றான்.

சபரி கண்டாள். அன்பினால் உருகினாள். கண்ணீர் பெருக்கினாள். "மாண்டது மாயப் பாசம். போயது பிறவி" யென்றாள். சபரி வேறல்ல; வள்ளி வேறல்ல; பழத்தை யுண்ட ராமன், சபரி! சௌக்கியமாயிருக்கிறாயா? என்று கேட்டான். நீ வருவா யென்று காத்திருந்தேன்; இன்றுதான் என் புண்ணியம் பூத்தது" என்றாள். அவளைக் கண்டு "சீதையைப்பிரிந்த துன்பமெல்லாம் நீங்கிவிட்டது" என்றானும் இராமன்.

"மைவரும் கண்டத்தர் மைந்த கந்தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறியேன் கற்ற கல்வியும்போய்ப்
பைவரும் கேளும் பதியும் கதறப் பழகி நிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும் போதுன் அடைக்கலமே"

என்று முறையிட்டாள் வள்ளி.

சபரி அருந்தவத்தரசி. தன்பற்றை யெல்லாம் ஆண்டவனுக்கே செலுத்தியவள். இத்தகையவர்கள் தான் உண்மையான துறவிகள். இவள் ராமனை மோக்ஷம் வேண்டுமென்று கூடக் கேட்கவில்லை. உன்னைக் கண்டேன்; என்புண்ணியம் பூத்ததென்றாள். அவளைக் கண்டதால் சீதையைப் பிரிந்த துன்பம் நீங்கிற்றென்றான் இராமன்.

வள்ளி முருகனைத் தவிர வேறொன்றிலும் விருப்பமில்லாதவள். முருகா! சரணம் என்று கதறிக் கொண்டிருந்தாள். வானவழியாய்ச் சென்று கொண்

முட்டை யிடுமுன் குஞ்சுவிலை பேசுனர்போல,
ஒட்டார்கள், ஞானம் உணர்ந்தார்போல் ஓதுனரே.

டிருந்த நாரதர் காதில் இவ்வொலி புகுந்தது. பூரண கிரியாகிய தணிகைக்குச் சென்றார். "முருகா! இங்கு தான் நீ பூரணமாயிருக்கிறாய் என்று வந்தடைந்தேன். குறக்குடியில் பிறந்த பெண்ணொருத்தி, முருகா! சரணம் என்று கதறிக் கொண்டிருக்கிறாள்; அவளைக் காக்க வேண்டும் என்றார். தெய்வயானை யுடனிருந்த முருகன், அப்படியா! இதோ வந்துவிட்டேன் என்று கிளம்பினான். மயில்மேலேறி வரும்படி கூறினார் நாரதர். என் பக்தர்கள் என்னைத் தேடிக் கொண்டு காவடியெடுத்துக் காலால் நடந்துவர, நான்மட்டும் வாகனத்திலேறுவேனா? நடந்துதான் வருவேன் என்றார்.

இதே வகையில்தான் சபரியைத் தேடிச்சென்றார் இராமர். இராமாவதாரமும், ஸ்கந்தாவதாரமும் எப்பொழுதும் நடந்து கொண்டே யிருக்கின்றன. சபரிக்கு மட்டுமா இராமர் மோக்ஷம் கொடுத்தார். எல்லா ஜீவராசிகளுக்கும் எப்பொழுதும் கொடுத்துக் கொண்டே யிருக்கிறார். உலகமெல்லாம் ஒன்று என்ற உணர்ச்சியை அடைவதே மோக்ஷம். இந்த மோக்ஷம் தொண்டர் கூட்டத்தில் ஒன்றுவதில்தான் வருகிறது. நானற்ற நிலையே, எங்கும் நீயுற்ற நிலை. ஆண்டவனுடைய அருள்சக்தி யெல்லாம் திரண்டு ஒரு ரூபமாயிருப்பதுதான் சரணம். சரணம் என்றவுடன் வினைகளெல்லாம் கீழே விழுந்து விடுகின்றன. இதையே வைணவர் ப்ரபத்தி யென்கின்றனர். இதுவே வள்ளி கலியாண மங்களநிலை. சபரிமோக்ஷ ஆனந்தநிலை.

கோலப் பொருத்தசிவம், குணப்பொருத்தம் மெய்ச்சத்தி;
ஞாலத்தில் நம்மை நலமுறுத்து கின்றனவே.

பழி அஞ்சியது

[கி. வா. ஜகந்நாதன்.]

மதுரை மாநகரத்தில் எழுந்தருளி யிருக்கும் இறைவனுக்குப் பழியஞ்சிச் சொக்கன் என்பது ஒரு திருநாமம். அது வந்ததற்குக் காரணமான வரலாறு இது.

திருப்பத்தூரிலிருந்து ஒரு மறையவன தன் மனைவியோடும் குழந்தையோடும் மதுரைக்கு வந்து கொண்டிருந்தான். மதுரையில் அவனுடைய மாமனுர் இருந்தார். அந்தணர் வந்துகொண்டிருந்தபோது இடையில் அவனுடைய மனைவிக்கு நீர் வேட்கை மிகுதியாயிற்று. அவளுக்கு நீர் கொண்டுவருவதற்காக அவளை ஓர் ஆலமரத்தடியில் இருக்கச் செய்துவிட்டுப் புறப்பட்டுச் செனுருன். அப்பொழுது ஆலமரத்தில் சிக்கியிருந்த அம்பு ஒன்று காற்றுல் அலைபுண்டு விடுபட்டு மரத்தின் கீழேயிருந்த அந்தணன் மனைவியின்மேல் பாய்ந்து அவள் உயிரைப் பறிததது. அவள் உடம்பிலிருந்து பெருக்கெடுத்த இரத்த வெள்ளத்தில் குழந்தைகிடந்து அழுதுகொண்டிருந்தது.

அப்போது ஒரு வேடன் கையில் அம்பும் வில்லும் உடையவனுக, வெயிலின் கொடுமைக்காக அந்தப் பெரிய ஆலமரத்தின் வேறு ஒரு பக்கத்தில் ஒதுங்கி யிருந்தான.

மறையவன் நீரைக் கொண்டுவந்து ஆலமரத்தடியை அடைந்தபொழுது தன் மனைவி இறந்துகிடப்பதைக் கண்டான். மனம் கலங்கி, இந்தப் பெண்பழியை ஏற்றுக் கொண்டவர்கள் யாரென்று பார்க்கத் தொடங்கியபொழுது வேருெரு புறததில் இருந்த வேடனைக் கண்டான். அவன் கோலத்தைக் கண்டவுடன், 'இவன்தான் இப்பாதகத்தைச் செய்திருக்க வேண்டும் என்று துணிந்து, " பாண்டிய மன்னன்மேல் ஆணை ! நீ என்

கடலின அலையும், கவினமணலும், வானும்,
உடன்நோக்கி, ஞான உயர்வுறுவர் மேலோரே.

மனைவியைக் கொன்றுவிட்டு நிற்கிறாய். வா, அரசனிடம் போகலாம்" என்று அவன் கையைப்பற்றி இழுத்துச் செல்ல லானான். இறந்த மனைவியை முதுகிலே தூக்கிக் கொண்டான். குழந்தையை இடையில் எடுத்துக் கொண்டான். புறப்பட்டு விட்டான். வேடன் என்ன சொல்லியும் கேளாமல் அவனை யும் இழுத்துக் கொண்டு நேரே மதுரைக்கு வந்து அரசன் அரண்மனைக்கு முன்னே நின்று முறையிட்டான்; "அரச நீதியினின்றும் தவறாத மன்னர் பெருமானே, இது நியாயமா? திருமகளை மார்பிலே வைத்த திருமாலைப் போன்றவனே, இது தருமமா? சந்திர குலத்தில் வந்தவனே, இது முறையா? முன்பு தவறாக ஒருவர் வீட்டுக் கதவைத் தட்டியதற்காகக் கையை வெட்டி பொன்னாலான கையை ஒட்டிக் கொண்டவனே, இது நீதியா? என்று புலம்பினான்.

"கோமுறை கோடாக் கொற்றவர் ஏறே முறையேயோ?
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா முறையேயோ?
மாமதி வானோன் வழிவரு மைந்தா முறையேயோ?
தீமைசெய் தாய்போல் செங்கை குறைத்தாய்
முறையேயோ?

வாயில் காவலர் அந்தணனுடைய முறையீட்டைக் கேட்டு அவன் கோலத்தைக் கண்டு, உள்ளே சென்று மன்ன வனுக்கு எல்லாவற்றையும் எடுத்துரைத்தனர். அதுகேட்டுப் பாண்டியன திடுக்கிட்டான்; மனம் கலங்கினான்; 'என்னுடைய அரசியலில் இப்படி ஒரு பழி நேருவதா?' என்று வருந்திப் புறம்போந்து அந்தணனைப் பார்த்து, "என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"இன்று இவளை அழைத்துக் கொண்டு வரும்போது இடையில் ஓர் ஆலமர நிழலில் இவளையும் குழந்தையையும்

அமர்ந்து படுத்து அமைதி யுறல்போல்,
அமைந்து தியானித்து, ஆனந்தம் எய்துவமே.

விட்டுவிட்டு நீர் கொணரச் சென்றேன். நான் கொண்டு வருவதற்குள் இந்தக் கொலைவேடன் அவளைக் கொன்றுவிட்டு வேறு ஒரு புறத்தில் நின்று கொண்டிருந்தான் " என்று அவன் கூறினன். பாண்டியன் வேடனைப் பார்த்துக் கேட்க முற்பட்டபோது அவன, மன்னர் பெருமானே, அடியேன் யாதொரு பாவத்தையும் அறியேன். வெயில் கடுமையாக இருந்தமையால் அந்த மரநிழலில் ஒதுங்கினேன், அடியேன் கொல்லவும் இல்லை. யார் கொன்ருர் என்பதையும் அடியேன் அறியேன் " என்ருன்.

உடன் இருந்த அமைச்சர் முதலியோர், " கொன்றவன் நான் கொன்றேன் என்று சொல்வானு? கடுமையாகத் தண்டித்தால் உண்மையைக் கக்குவான் " என்ருர்கள். அவ்வாறே அவனைத் தண்டித்தும் அவன் முன சொன்னதையே சொன்ஞன். அதுகேட்ட பாண்டியன் ஒன்றும் தேருமல் தடுமாறினுன். ' ஒருகால் யாரேனும் ஏதோ விலங்கை வேட்டையாட விட்ட அம்பு இவள்மேல் பட்டு உயிரை யுண்டதோ? ' என்று யோசித்தான். நீதி உணர்ந்தவர்களை நாடி, " இதை ஆராய்ந்து தெளியுங்கள் " என்ருன். அவர்கள், இது நீதியினுல் தெளிவுபெறும் தன்மை உடையதன்று. தெய்வத்தால் தெளிந்தால் தெளியலாம் " என்று சொலலி விட்டார்கள்.

மன்னன வேதியனைப் பார்த்து, எப்படியேனும் இந்தப் பழிக்குக் காரணமானவரைக் கண்டுபிடித்து உன் உள்ளக் கவலையை ஒழிப்பேன். நீ உன் மனைவிக்குரிய ஈமக் கடன்களையெல்லாம் குறைவறச் செய்வாயாக! " என்று சொல்லித் தேற்றினுன். வேடனைச் சிறையில் வைக்கும்படி கட்டளையிட்டான்.

மருளாத மக்களையும் தாம்மயக்கு வார்கள்;
தெருளார் தவறு தீர்ந்துயரல் என்றேயோ?

தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடன்களை யெல்லாம் செய்த வேதியன் மீண்டும் பாண்டிய மன்னனை அடைந்தான். அரசன் அவனைத் தன் அரண்மனையில் இருக்கச் செய்து, உண்மை தெரியாமல் ஏங்கும் நிலைதீரச் சிவபெருமானை அணுகி வேண்டலாம் என்ற எண்ணத்தோடு திருக்கோயிலுக்குச் சென்றான். இறைவனைப் பணிந்து, "எம்பெருமானே, இந்தப் பிராமணப் பெண்ணை வேடன் கொன்றானோ? வேறு யாரேனும் கொன்றார்களோ? அன்றி விலங்கினந்தான கொன்றதோ ? எப்படி ஆராய்ந்தாலும் உண்மை புலனாகவில்லையே ! நியாயத்தை நிலைநிறுத்த வகையின்றித் தலைகுனிவோடு இருக்கிறேன. இந்தத தாழ்வை நீதான் போக்கியருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

அபபோது இறைவன் திருவருளால் ஓர் அசரீரி வாக்கு எழுந்தது; "இந்த மாநகரத்தின் புறம்பே ஓரிடத்தில் வணிகர் தெரு ஒன்று இருக்கிறது. அங்கே ஒரு வீட்டில் திருமணம் நடைபெறுகிறது. அங்கே வேதியனோடு போ. தெளிவுண்டாகும்படி செய்கிறோம்" எனறது அக்குரல். அதுகேட்ட பாண்டியன் இறைவனைப் பணிந்து புறம்போந்து அரண்மனையை அடைந்தான. அந்தணனையும் அழைத்துக் கொண்டு வேறுகோலம் புனைந்து இரவு நேரத்தில் அந்த வணிகருடைய வீட்டுக்குச சென்று மறைவாக நின்றிருந்தான்.

அப்போது அங்கே மணவாளக் கோலத்தில் உள்ள மணமகனுடைய உயிரைப் பறித்துச் செல்ல இரண்டு யமதூதர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் பேசுவது அந்தணனுக்கும் அரசனுக்கும் கேட்டது. இறைவன் கேட்கும்படி அருள் செய்தான். அவ்விருவரில் ஒருவன், "இவன உடல் வலிமையுடன் இருக்கிறான். ஒரு நோயும் இல்லை. இவனுடைய உயிரை

வாழ்வில்நோய் வாரா வழியறிந்த நல்லோர்கள்,
தாழ்வறியார், வாழும் தரமுணர்ந்து நின்றாரே.

எடுத்து வரும்படி நம் தலைவன் பணித்தானே! எவ்வாறு கொண்டு செல்வது?'' என்று கேட்டான. அப்போது மற்ற வன், ''இது என்ன பெரிய காரியம்! அன்று ஆலமரத்தில் சிக்கியிருநத அம்பைக காற்றினல் விடுபட்டுப் பிராம்மணப் பெண்மேல் பாய்ந்து உயிர்கவரச் செய்தோமே! அதுபோல அதோ கடடியிருக்கிற காளைமாட்டைத் தும்பை அறுத்துக் கொண்டுபோய் இந்த மணமகனைக் குத்தி உயிர் வாஙகும்படி செய்துவிடுவோம்'' என்ருன்.

இதைக்கேட்ட அரசன் அந்தணனிடம், ''இதைக் கேட் டாயா?'' என்று கூற அவன், ''இவர்கள் கூறியபடியே நடந்தால் என்மனம் தெளிவுபெறும்'' என்ருன்.

சிறிது நேரத்தில் வாத்தியஙகள் சேர்ந்து ஒலித்தன. அப்போது அவ்வொலி கேட்ட மாடு மருண்டு கயிற்றை அறுத்துக் கொண்டு செனறு மணையில் அமர்ந்திருந்த மாப் பிள்ளையைக் கொம்பால் குத்திக் கொன்றுவிட்டது. மண மகன் பிணமகனுனன். மணப்பறை பிணபபறையாயிற்று. வாழ்த்தொலி பாடிய மங்கைமார் ஒபபாரி பாடலானுர்கள்.

அப்போதுதான அந்தணனுக்கு உண்மை இது என்ற தெளிவுண்டாயிற்று. ''என்ன காரியம் செய்தேன்! குற்ற மற்ற ஒருவனுக்குத் துன்பு இழைத்தேனே!'' என்று இரங்கி ஞன். பாண்டிய மன்னன் அந்தணனேடு அரண்மனைக்குச் சென்று நிகழ்ந்தவற்றை அமைச்சர் முதலியவர்களுக்குச் சொல்ல, யாவரும் இறைவன் திருவருளை எண்ணி எண்ணி வியந்தார்கள். அந்தணனை இரண்டாம் முறை திருமணம் செய்துகொள்ளும்படி கூறி வேண்டிய பொருள்களை வழங்கி ஞன். அரசன் சிறையில் இருந்த வேடனை விடுதலை செய்து, ''உண்மையை அறியாமல் நான் செய்த பிழையைப் பொறுக்க

எம்மானைக் காணுநாள் என்றென் றழுதவர்கள்,
அம்மம்மா! ஆன்மபலம் ஆர்த்தகதை ஆயிரமே.

வேண்டும்" என்று சொல்லி அவனுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பினுன். பிறகு, நான்மாடக் கூடல் இறைவனை வணங்கி, "எம்பெருமானே, எனக்கு வந்த பழியை நீக்கமாட்டாமல் நான் கலங்கி நிற்க, இவ்வெளியேனுக்காக அந்தப் பழிக்கு நீ அஞ்சி உண்மையை உணர வழி வகுத்தாயே! உன் திருவருள் இருந்தவாறு என்னே!" என்று மனமுருகித் துதித்தான.

இவ்வாறு இறைவன் அருளால் உண்மையை உணர்ந்தவன், இராச சேகர பாண்டியனுடைய மைந்தனுகிய குலோத்துங்க பாண்டியன்.

சித்தர்கள் சிறப்பு 14

கருவூரார்

(ரஸபதி)

சோழர்கட்கு ஐந்து தலைநகர். அவைகளுள் ஒன்று கருவூர். அப்பதியில், அறநெறி வழுவா அந்தணர் பலர். அவர்கள் இனத்தில் ஒரு அறிஞர் உதித்தார். பிள்ளைப் பருவத்திலேயே அவர் அறிவு பிரகாசித்தது. அருள நூற்களில ஆர்வம் விளைந்தது. ஓதி அவைகளை உணர்ந்தாா. இறைவியை நினைந்தார். 'தன்னை மறந்த லயந்தனனில் இருந்தார்.'

எம்மயக்கும் இலலை. இனி யிவர்க்கு எந்தக் கருவிலும் இடமில்லை. இவர் கருவூரார் என்று அறிஞர்கள் எண்ணினர். அவரை அப்பெயர் கொண்டே அழைத்தனர்.

திருமூலரை உய்வித்தது திரு ஆவடுதுறை. அங்குப் போகர் வந்துளர். அதைக் கருவூரார் அறிந்தார்; விரைந்தார்;

பாலன குமரன் பழுத்த வயோதிகனு
ஞாலத்தில் சாயவோ நான பிறந்தேன் எம்மானே.

போகர்முன் வீழ்ந்து வணங்கினார். கண்ட போகர்க்குக் கருணை சுரந்தது.

கருவூரா! அம்பிகை உன் குல தெய்வம். வாமையை நீ என்றும் வழிபடு! வாழ அத்தேவி வழிகாட்டுவள் எனறார். உமையை அணுகும் முறைகளையும் உபதேசித்தார்.

புனித சிவத்தை திருமாளிகைத் தேவர் பூசிக்கிறார். உமையாள் திருவடிகளில் உணர்வைப் பாய்ச்சி, உள்ளம் உருகுகிறார் கருவூரார். இருவர் இடையிலும் போகர் இருந்து, சாதனையில் பிறக்கும் ஐயங்களை, அவ்வப்போதே அகற்றுகிறார்.

ஒருநாள் திருமாளிகைத் தேவர், தம் வழிபாட்டின் இறுதியில், சிவ நின்மாலியத்தை, அனபுடன கருவூரார்க்கு அளித்தார்.

மலம் என்பது அழுக்கு; மால்யம் என்பது, அழுக்கின் சம்பந்தம் ஆனது; இயல்பில் எந்த அழுக்கும் இல்லாதவர் சிவபிரான். அதனால் அவர், நின்மலர் எனப்பெறுவர். நின்மலர் தொடர்பால மாலயம், நின்மாலியம் என்ற பெயர் பெறுகிறது.

கைக்கு வந்த நின்மாலியத்தை, கருவூரார் அப்போதே அருந்தினார். அதன் பயனாக, அகஞானம் பெருகியது. வித்தக சாதனையில், தெயவீகம் விளங்கியது. கண்ணில் சிவை. அவர் கருத்தில் சிவை, இப்படி சிவையின திருவருள் எங்கும் சிலிர்த்தது. அதைக் கண்ட கருவூரார் உள்ளம் களித்தது. எவருடைய வாழ்க்கையும், "அவளால வந்த ஆக்கம்" என்று அறிந்தார். ஆநந்தம் எய்தினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரசாண்டவர், இராஜ ராஜ சோழர். அவர் சிவபாத சேகரர் என்னும் சிறப்புப்

எந்தப் பருவத்தும் என்னில் இணைந்தே,உன்
சொந்தம் எனஒருசொல், சொல்லிவைத்தால் ஆகாதோ ?

பெயரைப் பெற்றவர். அம் மன்னர் தஞ்சையில் இராஜ ராஜேச்சுரம் என்னும் ஒரு ஆலயத்தை அமைத்தார்.

ஆவுடையார் 54 அடி சுற்றளவு. 6 அடி உயரம். இலிங்கம் 23½. கோயிலும் இலிங்கமும் பெரியது ஆதலின், இது பெரிய கோயில் என்று பெயரிட்டார்.

கோயில் கட்டி முடிந்தது. இலிங்க பந்தனத்திற்கு, இயன்ற அளவு முயன்றனர். மருந்து இளகவில்லை. அதனால் பந்தனம் ஆகவில்லை. அறிந்த மன்னர் அயர்ந்தார். கண்ணீர் பெருக்கிக் கதறினார்.

அச்செய்தியைப் போகர் அறிந்தார். உடனே கருவூராரைக் கண்காட்டி அழைத்தார். தஞ்சைக்குப் போ! இலிங்கப் பிரதிட்சை செய்துவிட்டு வா! நீ சக்தி தாஸன்; அது உன்னால்தான ஆகும் எனறார்.

புனித கருவூரார், உடனே புறப்பட்டார். அவர் வருகையறிநத அரசர், அவரை வணங்கி மகிழ்ந்து வரவேற்றார்.

கருமமே கண்ணான கருவூரார், சிவலிங்க பந்தனத்தில் சிந்தனை செலுத்தினார். உவகையுடன் சுவைத்த தாம்பூலப் பசையை, மருந்தில் உமிழ்ந்தார்; பிசைந்தார். எடுத்து நிறுத்து இறுக்கினார். இனிய லிங்கம் இறுகியது.

அதே நேரத்தில் நூறுகோடி சூரியர்கள் ஏககாலத்தில் எழுந்ததுபோல், இலிங்கத் திருமேனி மின்னி அற்புதமாய் மிளிர்ந்தது. அதனின் ஒரு கிரணம், கருவூரார் இதயம் புகுந்து களிநடம் புரிந்தது.

கண்ட மன்னர் கைகுவித்தார். அன்பர்கள் எழுப்பிய ஹரஹர ஒலி, விண்ணில் அதிர்வை விளைத்தது. காணும் இடமெல்லாம் கருவூரார் கண்முன், சிவபிரானது நெற்றிக் கண்ணே எதிர் நிற்கிறது. ஓம் ஓம் என்ற ஒலியொடு திருவடி

எம்பந்த வல்வினை, எஙகோ பறந்தொழியச்
சம்பந்தம் செய்நீ; சதுராலே வாழ்வானே !

கள் உளத்தில் குடிபுகுந்தன. அவைகள் இனி அந்த இடம்விட்டு அகலா! புறத்தில் பரன் உருவைப் பந்தனம் செய்தேன். அதன் பயனாக, அகத்தில் எம்மான் பந்தனம் ஆயினன். இனி எவர் உறவும் வேண்டேன் என்று ஆனந்தம் கொண்டு ஆடுகிறார்; இக்கருத்தமைந்த பாட்டும் ஒன்றும் பாடுகிறார்.

"நெற்றியிற் கண் என் கண்ணின்நின்று அகலா;
நெஞ்சினின் அம்சிலம்பு அலைக்கும்;
பொற்றிருவடி என்குடிமுழு தாளப் புகுந்தன,
போந்தன இல்லை;
மற்றெனக்(கு) உற(வு)என்? மறிதிரை வடபாற்(று)
இடுபுனல், மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சுரத்(து) இவர்க்கே!"

[*மறிதிரை - மடங்கும் அலைகள். வடபாற்று இடுபுனல் - வட புறத்தில இறைக்கும் நீர். முதலை - முதலையை. எற்றுநீர் கிடங்கில் - எடுத்து எறியும அகழியில். இஞ்சி - மதில்.*]

தளிர் போல்வது பிறப்பு. முதிர்ந்து உதிரும் இலை போல்வது மரணம். எப்போதும் அதை எண்ணி ஆவது என்?

"பிறப்பில் தளிர்; இறப்பு, இலைஉதிர்வு; என்றால்,
நெஞ்சு இடிந்து உருகுவது எவனோ?"

[*எவனோ - என.*]

உள்ஒன்று புறம்ஒன்று ஆகாத உயர்வாழ்வு வேண்டும். குருதி கொதிக்கும் அளவு, குரூர நினைவுகள் வேண்டா. தஞ்சை இராஜ ராஜேஸ்வரர் திருவடிகளை எண்ணுங்கள்! ஏத்துங்கள் என்று, ஒரு பதிகம் பாடி உள்ளம் உருகினார்.

அங்கிருந்து தில்லையை அடைந்தார். "மறைப்பொருள் மறையோர் சிந்தையில் அரும்பும்" அம்பலத்தின் முன்னர்

எத்திக்கும் போற்றும் எழிலரசே! என்னுள்ளத்தில்
சத்தமது காட்டிச் சதாசிவன்காரன் என்றாயோ ?

அணுகினார். கைகள் குவிந்தன. புனித அன்பைக் கண்கள் பொழிந்தன.

உயர்ந்த குலத்தில் உதித்தேன்; செல்வத்தில் செழித்தேன்; கணக்கிலாதன கற்றேன் என்ற முனைப்புடையார்க்கு, அமலா! நீ அகப்படாய்! காலமும் கர்மமும் கண்கலக்கம் செய்ய, அகதி ஆயினேன்! ஐயகோ!

" தாயின்நேர் இரங்கும் தலைவவோ என்றும்
    தமியனேன் துணைவவோ என்றும்
நாயினேன் இருந்து புலம்பினால், இறங்கி
    நலம்புரி பரமர்தங் கோயில் "

[நேர் - ஒப்பாக. தமியனேன் - அகதியான என்.]

ஆம்; இதுதான உண்மை; உணர்ந்தேன். பிரபோ! எளியன் நான ஒரு ஏழை. என்னை ஏற்றுக் கொள்ள மாட்டாயா? மோசமான பிறவிக்கடல், அலையலையாக வந்து மோதுகிறதே! தட்டுக் கெட்டுத் தடுமாறி, நீராழமான அதில் நீந்துகின்றேனே!

என் உடன் பிறந்தார் ஐவர், கண்ணன், காதன், மூக்கன், நாக்கன், தோலன எனும் இவர்கள், ஒவ்வொரு நாளும், அளிக்கும் தொல்லைகட்கு அளவே இல்லையே! அறியாமைச் சேற்றில், மேலும் மேலும் ஆழ்த்துகின்றனரே! பங்காளிகள் இவர்களை எண்ணினாலும் பயம் மிகுகிறதே!

" இவ்அரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
    ஏழையேற்கு, என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே! யார்துணை? என்றால்,
    அஞ்சல் என்று அருள்செய்வான் கோயில் "

[பௌவம் - கடல்.]

அடியவரிற் சார்வாய்; அளியன்(அ)கத் திருக்க முடியாதோ? பாவம் முடிசாய்ந்து போகாதோ?

'புலியூர்த் திருவளரி திருச்சிற்றம்பலத்து அருமையை இப்படி யெல்லாம் போற்றிப் புகழ்ந்தார். (ஒருகாலத்தில் கருவூரார் அமைத்த மூர்த்தம், நடராஜர் திருவுருவம் என்பதை, சென்ற ஆண்டு அமிர்தவசனியில் அறிந்துளம்.)

"அன்னை தேன் கலந்து இன்னமுது அளித்தாங்கு
அருள்புரி பரமர்தம் கோயில் ஆன"

தில்லையைப, பிரிய மனமின்றிப் பிரிந்தார். அங்கிருந்து திருக்களந்தை என்னும் தலத்தை அடைந்தார். அத்தலத்தில் ஆதித்தேச்சுரம் என்று ஒரு ஆலயம். அங்கு,

"கலைகள்தம் பொருளும் அறிவுமாய், என்னைக்
கற்பினிற் பெற்றெடுத்து, எனக்கே
முலைகள் தந்தருளும் தாயினும் நல்ல
முக்கணன்"

என்று உம்பர் பிரான் கோலம் கண்டு கும்பிட்டார்.

அங்கேயே சிலநாள் தங்கி யிருந்தார். புனித நீற்றைப் பூசுவார். ஓயாது கோயிலை வலம்வருவார். "பழையராம் தொண்டர்க்கு எளியரே" என்று குவிந்த மனம் கொண்டு கும்பிடுவார். வம்பும் தும்பும் வலலடி வழக்கும் செய்யும் 'மிண்டர்க்கு அரியரே!' என்று விரைதது நிற்பார். என் (பிறவிப்) பிணி (யை ஒரு சிறிதும்) பொறுத்தருளா (து ஒழிக்கும்) பிசசரே! என்று இன்பக் கண்ணீரை இறைப்பார்.

"மெய்யரே மெய்யர்க்கு; பொய்யரே பொய்யர்க்கு" என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்து அங்கிருந்து புறப்பட்டார்.

கீழ்க்கோட்டூர் என்று ஒரு தலம். அங்கு மணியம்பலம் என்று ஒரு ஆலயம்.

அங்கு எழுந்தருளிய அமலனைத் தரிசித்தார். அவ்வளவில், இறைவன் மேல் பெருகிக் காதல் பிறந்தது.

பவலோகத் தடியேன் படுதுயரம் தீரச
சிவலோகம் சேர்க்கும் சிறந்தநாள் என்றேயோ ?

உம். என்ன இது! புறப்படு. இங்கிருந்து போய்விடலாம் என்று, அவரை அறிவுத் தோழி அதட்டல் ஆயினள். தோழீ! நான் என்னேடி செய்வேன்?

" வளரொளி மணியம் பலத்துள்நின் ருடும்
மைந்தன்,என் மனங்கலந்தானே "

உனக்கோ எனக்கோ அவரைத் தவிர, வேறு துணை எவருளர்? எப்பொருள் உளது? பைத்தியக்காரி! கேளடி கேள்!

" பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்து,என்
பனிமலர்க் கண்ணுள் நின்று அகலான் "

[*பாதுகை - மிதியடி.*]

கலங்கும் மனத்தைச் தெளியச் செய்வது திருநீறு. அதைப் பூசிய அழகன் அவன். எனது உடல், அந்த நீற்றையே ஆவலிக்கின றது. என் செவிகள் இரண்டும், அவன் அருள் நூல் கேட்கவே ஆசைப்படுகின்றன. வாய் அவன் நாமங்களையே வழுத்த விரும்பும். கண்கள், அவனது கோயில் விமானத்தையே காணக் கருதும். நாசி, அவனையே எண்ணி வெப்பமான மூசசுவிடும்.

" வள்ளலே! மணியம் பலத்துள் நின்றுடும்
மைந்தனே என்னுமென் மனனே!"

அவன் உருவமும், ஜடையும், நீறும்,

" சிந்தையால் நினையில் சிந்தையும் காணேன்
செய்வது என்?"

என்று சிரிக்கின்ருள் தலைவி. தன்னை இப்படி ஒரு தலைவியாகப் பாவிக்கக் கருவூரார்க்கே தகும். காரணம் அவர் சத்தி உபாசகர் அலலவா! இபபாவனையில் பாடிய பாடல்கள் பதினென்று. இதைப் பாராயணம் செய்தால், எல்லாச் செல்வமும் எளிதின் எய்துமாம்.

ஊனமா நாடகத்தால் ஓய்ந்தடியேன் வீழுமுனர்,
ஞானத் திருக்கூத்தை நானறியச் செய்யாயோ?

முத்தியாம் என்றே உலகர் ஏத்துவரேல்
முகமலர்ந்து எதிர்கொளும் திருவே !

இது அவரே செய்த அறிவிப்பு !

அங்கிருந்து திருமுகத்தலை என்னும் தலத்தை எய்தினர்.

"வினைபடும் உடல்நீ புகுந்து நின்றமையால்,
விழுமிய விமானம் ஆயினதே !"

என்று, தன் உடம்பாகிய விமானத்துள் பரன் உறவு கொண்ட அருமையைப் பாராட்டிப் பணிந்து, அங்கிருந்து ஆடுதுறைப் பதிக்கு அருகில் உள்ள திரைலோக்கி என்னும் தலத்தை அடைந்தார்.

அப்பொழுது அத்தலத்தில் திருவிழா நிகழ்கிறது. சேவித்தபடி, பெருமானுடன் மாடவீதியை வலம் வந்தார். சுவாமி பெயர் சுந்தரர். அருளற்புதமான அமலனது அழகுத் திருமேனி, உள்ளத்தைப் பாகாய் உருக்கியது. பத்து நாள் விழாவிலும் இதே நடை. ஒருநாளும் விக்ரகத்தி லிருந்து விமலன வெளிப்படவில்லை. நைந்தது மனம். அழுதார். தொழுதார். அலறினர்.

நையாத மனத்தினனை நைவிப்பான், இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்று முதல் இன்றுவரை,
கையாரத் தொழுது, அருவி கண்ணூரச் சொரிந்தாலும்,
செய்யாயோ அருள் ? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே !

என்று உருகிப் பாடிய பதிகத்திற்குப் பின், பரமன் திருவருள் பாலித்தான்.

அங்கிருந்து மீண்டார். கங்கை கொண்ட சோளேச்சுரம் என்னும் அரிய தலத்தை அணுகினர். எம்மான சந்நிதி சென்று இறைஞ்சினர். மூல முதல்வர் அருள் ஒளி, புகுந்து அவர் உளத்தில் பொலிந்தது. வியந்தார்.

உயிராகி யெங்கும் உறவுகொளும் உன்னைப்,
பயிரான ஆன்மாக்கள், பாராமை என்னேயோ?

மூவா முதலே! பார் அனைத்தையும் பிரமன் படைத்தவன். ஒரு சமயம் அவன் உமது முடிகாண முயன்ருனும். அவன் ஊர்தியான அன்னம் நினைவில் நிழலிட, அதன் வடிவம் கொண்டானும். பலகாலம் பறநதும் பார்க்க இயலாமல் பங்கம் அடைந்தான அவன் என்று, அளவிலாத நூற்கள் இதை அறிவிக்கின்றன. அத்துணைப் பெரிய பெருமான் நீ, மிகச் சிறிய என்னையும் ஆள எண்ணி, எளியேன் இதயம் புகுந்தது என்ன அதிசயம்!

" அன்னமாய் விசும்பு பறந்(து) அயன்தேட,
அங்ஙனே பெரியநீ, சிறிய
என்னை ஆள் விரும்பி, என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறவேன் "

அவ்வளவுதானு! நகரத்துள் திருவடி நடமிடுகின்றது; மகரத்துள் திருவயிறு மலர்கிறது; சிகரத்துள் திருத்தோள்கள் சிறந்திருக்கின்றன. வகரத்துள் திருமுகம் வாழ்கிறது. யகரத்துள் திருமுடி இலங்குகின்றது.

இந்த ஐந்து எழுத்தையும், பக்தர்கள் இதயத்தில் பதித்துளர். அவர்கட்கு, அதன் வழியே பரம இன்பம் பலிக்கிறது.

இப்படியே இருந்தால், இவ்வுலக லௌகிகம் என்ன ஆவது?

சீ! என்ன அற்பமான கேள்வி. மண்ணும் பொனனும் பெண்ணும், மற்றவர்க்குக் கன்ம அளவு கை கொடுக்கும். தொண்டர்கட்கோ, பரமனே அம் மூன்றும்ஆகிப பலன் தருகிருன். கருதுவன யாவும் தர, அவன் கற்பகமே ஆகின்ருன். இநத அகபபொருள் ரகசியத்தை அறிவாரும் இல்லை. அறிய முயல்வாரும் இல்லை.

எரியுருவின் ஆடும் இறைவா! எனதுவினை
எரியக், கணநேரம் என்னைக்கண் பாராயோ!

" அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே !
அன்பொடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத் துள்வைத்து, உள்ளம அள்ளூறும்
தொண்டருக்(கு,) எண்திசைக் கனகம்,
பற்பதக் குவையும், பைம்பொன் மாளிகையும்,
பவளவா யவர்பணை முலையும்,
கற்பகப் பொழிலும், முழுதுமாய்க் கங்கை
கொண்ட சோளேச்சுரத் தானே !"

[குவை - கூட்டம்.]

பெருமான் பேருருவம் கொள்ளும் பொழுது, அவன்முன் அண்டங்கள் யாவும் அணுவாகித் தோன்றும். அவன் பரமாணு ஆம்போது, அணுக்கள் அனைத்தும் அண்டங்கள் போல் விரிந்து பெரிதாகி விளங்கும்.

ஒருநாள் தஞ்சை ராஜராஜ சோழர், உண்க ஐயா என்று, ஏராளமாக உணவை ஊட்டினார். குண்டோதரன்போல் நானும் உண்டபடியே இருந்தேன். எப்படி முடிந்தது அங்கிலே ? ஒளி மயம் ஆகி, உள்ளம் புகுந்த நீர் அல்லவா அவைகளை உண்டவர். இப்போது தானே அந்த ரகசியம் தெரிகிறது!

" அண்டம்ஓர் அணுவாம் பெருமை கொண்டு,
அணுஓர் அண்டமாம் சிறுமை கொண்டு,
உண்டவூண் உனக்காம் வகை,என(து) உள்ளம்
உள்கலந்(து) எழுபரஞ் ஜோதி!"

என்று நினைக்கிறார். நெஞ்சம் நெகிழ்கிறது.

உன்னை என்னிடம் ஒப்படைத்துவிடு ! அதனபின் வாழ்வு ஆநந்தம் ஆகும் என்று, ஆகமங்கள் மூலமாக அறிவித்தீர் ! எவரும் இதனை ஓதியுளர் ; எனினும் உணர்ந்து தம்மை ஒப்படைப்பது இல்லை. சீ ! என்ன உலகம் இது !

இருளகற்றும பேரொளியாய, இவைபுறுத்து கின்ற
தெருளே! சிவமாம் திருவுளிக்க வாராயே.

கண்ணில் பெண்; கருத்தில் பெண்; ஏழை என்னும் எண்ணில் பெண்; எழுத்தில் பெண். இப்படியா மோகம் கொண்டு மோதுவது?

இதைச் சொல்லுவது சுலபம்! இயற்கையை மாற்ற எவரால் இயலும்?

அடடே! நான் மாற்றச் சொல்லவில்லையே!

"தத்தை அங்கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவினை, நூறுயிரம் கூறு இட்டு,
அத்தில் அங்கு ஒருகூறு உன்கண் வைத்தவருக்கு,
அமருல்(கு) அளிக்கும் நின் பெருமை!"

[தத்தை - கிளி (போல் கொஞ்சு மொழி). அங்கனையார் - கோலம் செய்து கொள்ளும் கோதையர். அத்தில் - அந்த லட்சத்தில். தயா - அன்பு. நூறுயிரம் - இலட்சம்.]

இன்பப் பேறு, இவ்வளவு எளிதாக இருக்கிறது.

"மங்கையோ(டு) இருந்தே யோகு செய்வானை"

எண்ணுங்கள்! சாதகர்க்கு இலலறத்தால் தடையில்லை என்று பாடிக் கொண்டே இருந்தார். திடீரென்று அவர் முடியில் திருக்கரம் வைத்து, தீட்சை செய்தான தெய்வப் பெருமான். அதையும் இப்பதிகத்தில் அறிவிக்கிறுர்.

தல யாத்திரை செய்வதன் தத்துவம், அங்கங்கு உள்ள அருள் ஒளியை இதயத்தில் ஏற்றிக்கொள்ளும அநுபவந்தான். இதை நம கருவூரார் வரலாற்றுலும் அறிந்து கொள்ளுகிறேம்.

காகா என்றது காகம். திடுக்கிட்டுத் திரும்பினுர். அது, ஒரு ஓலைச் சுருளை எதிரில் இட்டது. உடனே வருக என்று போகர் எழுதியுளர். கருவூரார் அந்த ஓலையைக் கண்களில் ஒத்திக் கொண்டார். உடனே புறப்பட்டார். (தொடரும்)

ஒளிகொண்ட மேனிய! என் உளபுகுந்தா யாயின்,
தெளிவு பிறக்கும், திருவருளும் எய்துவனே.

குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

விகாச பதயே நமோ நம:

விகாச - மலர்ச்சி மிக்க ; பதயே - தலைவனுக்கு ; நமோ நம: - போற்றி ! போற்றி !!

விகாசம் :

விகாசம் என்பது மலர்தல் எனப் பொருள்தரும் வட சொல். விகசித்தல் - மலர்தல், விளங்க நிற்றல் எனவாம்.

மரபு :

நாம் பேசும்போதும், எழுதும்போதும் சிலவற்றிற்குக் குறிப்பிட்ட சில சொற்களையிட்டு வழங்குவது உண்டு. இவ் வாறே செய்யுளியற்றும் போது அதற்கென சில சொற்கள் உண்டு. அவை உரைநடையில் வருவதில்லை. இவ்வித முறைக்கு 'மரபு' என்று பெயர். இதுவே 'வழக்கு' எனவும் கூறுவர் பெரியோர். உலகில் வழங்குவது ' உலக வழக்கு.' செய்யுளில், நூற்களில் வழங்குவது ' செய்யுள் வழக்கு.'

உலக வழக்கு :

நாம் அன்றாட வாழ்க்கையில் வழங்கும் முறை ' உலக வழக்கு ' ஆகும். யானைக்கன்று, நாய்க்குட்டி, கோழிக்குஞ்சு என்று கூறுவோம். கன்று, குட்டி, குஞ்சு என்ற சொற்கள் இளமையை யுடையவற்றிற்கே உரியன என்றாலும், இச் சொற்களை மாற்றி யானைக்குஞ்சு, நாய்க்கன்று, பசுக்குட்டி என்று கூறுவதில்லை. இவைபோன்ற சொற்கள் நெடுங்கால மாக வழங்கிவரும் முறையிலேயே நாமும் வழங்குவது மரபு

களையான ஆணவக் கட்டறுந்த(து) ஆயின்,
முளையா. வினைதான், முதல்வா அருளுதியே !

என்பர். மேலே கூறியவாறுள்ள மரபுச் சொற்களில், உதித்தல், புலர்தல், கூம்புதல், மலர்தல் அல்லது விகசித்தல் என்பனவும் குறிக்கத் தக்கவை.

உதித்தல் :

என்பது, தோன்றுதல். இச் சொல் உலக வழக்கில் 'சூரியன் உதித்தான்' எனக் கேட்கிறோம். இங்கு உதித்தல் என்றால் இதுவரையில் கண்ணுக்குத் தெரியாமல் இருந்த சூரியன் தோன்றினன் என்று பொருள்படும். ஆனல் அரச னுக்கு ஓர் திருமகன் உதித்தான் என்றல் பிறந்தான் எனவாகும்.

புலர்தல் என்பது விடிவது. பொழுது புலர்ந்தது என்னும் போது காலை நேரம் வந்தது என்று குறித்தது ஆகும். கூம்பு தல் - குவிதல் ; மலர்தல் - விரிதல். சூரியனைக் கண்ட தாமரை மலரும். சந்திரனைக் கண்ட தாமரை கூம்பும். (குவியும்). எனவே, கூம்பல், மலர்தல் என்பன மலருக்கு உரிய மரபுச சொற்கள். கூம்புதலைக் குவிதல் என்றும், மலர்தலை விகசித்தல் என்றும் வேறு சொற்களால் குறிக்கலாம்.

விகாசபதி :

மலர்ச்சி மகிழ்சசியால் வரும். அகத்தில் மகிழ்ச்சி யிருந் தால் முகத்தில் மகிழ்ச்சி காட்டும். மலர்ச்சி அல்லது மலர்தல் என்னும் போதே அதனை யுடைய 'மலர்' பூவைக் குறிக்கிறது என்பது புலனாகும். தாமரை மலர்ந்தது, மல்லிகை மலர்ந்தது என்றெல்லாம் வரும். மலர் போன்றே மென்மை யுடைய முகம், அகம் இவற்றிற்கும் 'மலர்தல், குவிதல் அல்லது கூம்புதல் உண்டு. அகமும் முகமும் மலர்ந்தன என்னும் போது மனத்திலும் முகத்திலும் இருந்த மகிழ்சசியைக்

மின்னார் உருவமுள மேலோனே! மெய்ஞ்ஞான
என்ன ரமுத!நினை எய்துவதும் என்றேயோ?

காட்டும். இங்கு நம் இளமுருகனை மலர்ச்சி - மகிழ்ச்சி மிக்க பெருந்தலைவனாகக் காணும் பாம்பனடிகள் 'விகாசபதயே' என்கிறார்.

இங்குக் கூறியது வேலோனது உள்ளக் களிப்பினால் முகமும் விகசித்த (மலர்ந்துள்ள) தன்மை என்க. கவலையற்ற ஒருவனுக்குத்தான் மற்றவர் கவலையை மாற்ற முடியும். தனக்குவந்த வினை நீக்க வகையறியாத ஒருவன் பிறருடைய வினையை நீக்க முடியுமா? மட்டற்ற மகிழ்ச்சிமிக்க சேயவனால் தான் மற்றோர்க்கும் மாறாத மகிழ்வுண்டாக்க இயலும். அதனால்தான் முருகவேள் மகிழ்ச்சி காட்டும் விகசிதம் (மலர்ச்சி) உடையவன். அடியவர்க்கும் வற்றாத வளந்தந்து மகிழ்விப்பவன் என்கிறார்.

மலர்வது பூவின் குணமானால், மலர்ந்த மலர் ஒரு சமயம் கூம்பி வாடிபோகும். குகபிரானும் மலர்போல விகசித்தால், ஒருகால் வாடி மனம் கூம்புவனோ? என்னில், இப்பரமன் கூம்புதல் அற்றுக் கொய்யாது, குவியாது, குமையாது மணம் வீசும் கோமளத் தெய்வமலர் ஆவன் எனக. அவனது புன் முறுவல் பூததலர்ந்த பூஙகுமுதச் செவ்வாய் சென்மவிடாய் தீர்க்க வல்லது என்றறிக. 'வாடா மென்மலரே' மயிலேறிய மாணிக்கமே என்றார் பிறரும்.

கருணைக்கு உறையுளான கந்த தெய்வம் தனது விகசித்த முகமலரால் அடியரைக் களிப்புக் கடலாடச் செய்யும் சொந்த தெய்வம் என்று தெளிய வைத்ததாம்.

தெத்தேபித் தென்று தினம்பிதற்றி வீயாமல்,
அத்தா! அருளாடல் காட்டியெனை ஆளாயோ?

அருணகிரிநாத சுவாமிகள் புராணம்

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

(22-ம் பக்கத் தொடர்ச்சி.)

(9) கௌதமர் செய்த யாகத்தில் ஒரு சிவப் பிராமணன் அக்னி சொரூபம் போல் எழுந்தான். அங்ஙனம் எழுந்த சிவப் பிராமணனை "நீ அண்ணு மலையாரைப் பூசை செய்" என்று கட்டளை யிட்டார். அதன்பின் கௌதமர் ஏழு தர்ப்பையை எடுத்து குண்டத்தில் அக்னியில் போட ஏழு கணிகையர் (தேவதாசிகள்) எழுந்தார்கள். அவர்களை நீங்கள் இறைவன் சந்நிதியில் நிருத்தம் செய்யுங்கள் என்று கட்டளை யிட்டார். இத்தகையோர் வாழும் திருப்பதி அருணைமாநகரம்.

3. தீர்த்தங்கள்

1. குளங்கள்

அருணையம்பதியில் உள்ள தீர்த்தங்களாவன :—

(1) இந்திரதீர்த்தம்—இது இறைவனுடைய அபிஷேகத்துக்கு வேண்டி இந்திரன் அமைததது. இதில் மூழ்கினோர்க்கு அழகிய தோற்றமும் சுபமும் உண்டாகும்.

(2) அக்னிதீர்த்தம்—இது இறைவனுடைய அபிஷேகத்துக்கு வேண்டி அக்னியின் தேவி உண்டுபண்ணியது. இது தம்மாட்டு மூழ்குவோருடைய துன்ப நோய்களை நீக்கும்.

(3) யமதீர்த்தம்—இது மங்கிய தன் உடல் நலம் வளர யமன் அமைத்தது. இதில் மூழ்குவோர்க்கு அளவு கடந்த நலம் பெருகும்.

(4) வருணதீர்த்தம்—சூரியன் முதல் அக்னி ஈருக எல்லாத் தேவர்களும் இதில் மூழ்கி பயன பெற்றுள்ளார்கள். இதில் மூழ்குவோர் தாம்கருதிய கருத்து நிறைவேறப்பெறுவர்.

ஆவாம் அடியேனை, அன்போ டணைக்கின்ற
கோவாம் நினையுணர்ந்து, கும்பிடுதல் ஓராயோ ?

(5) குபேரதீர்த்தம்—குபேரன் [புருஷவாகனன்] அமைத்த இத் தீர்த்தத்தில் ஆறெழுத்தை ஓதி பக்தியுடன் ஒருதரம் ஆடும் புண்ணிய சீலர்களுக்கு நீங்காத இன்பமும் பெருநிதிகளும் இறைவன் மகிழ்ந்து அருளுவர்.

(6) நிருதிதீர்த்தம்—இது நிருதி உண்டுபண்ணினது. முருக மந்திரத்தை ஒருமுறை ஓதி இத் தீர்த்தத்தில் மூழ்குவோர் நீங்காத இன்பம் பெறுவர்; பகைமை நீங்கப் பெறுவர்.

(7) வாயுதீர்த்தம்—இத் தீர்த்தத்தில் முருகன் திருப்புகழை ஓதி பக்தியுடன் முழுகும் உத்தமர்க்கு நினைத்த காரியம் அனைத்தும் கைகூடும்.

(8) சிவகெங்கைதீர்த்தம்—தன்னை ஒருதரம் நினைத்திடும் புண்ணிய சீலருக்கு இத் தீர்த்தம் நிகரற்ற கங்கையில் ஆடிய பலனைத் தரும்.

(9) சக்கரதீர்த்தம்—இத் தீர்த்தத்தை (1) வலம் வருவோர் இடர்நீங்கப் பெறுவர். (2) பருகினோர் மனஇருள் நீங்கப் பெறுவா. (3) போற்றி ஆடினோர் நலமெலாம் பெறுவர்.

(10) பிரமதீர்த்தம்—ஆறெழுத்தை ஓதி அகம் குழைந்து இத் தீர்த்தத்தில் ஆடும் அன்பர்கள் ஒப்பற்ற நலன்களை இனிது பெறுவர்.

(11) மருத்துவர்தீர்த்தம்—முருகவேளின் திருவடிகளைத் தம் மனத்தில் இருத்தும் அன்பர்கள் இனிது வாழ்வுற நல்ல புலனகளைச் சிறப்புடன் நல்கவல்லது இத் தீர்த்தம்.

(12) அகத்தியதீர்த்தம்—புரட்டாசி மாதத்தில் கந்த மூர்த்தி மூர்த்தியை நினைந்து ஒருமுறை தன்னிடையே மூழ்கி ஒருகை தீர்த்தம் உண்போர்க்கு சகல கலைகளையும் தெளிவுற அறியும் பண்பை அருளுவது இத் தீர்த்தம்.

பள்ளத்தில் நீர்தங்கும் என்பதுபோல், அன்புடையார்
உள்ளத்தில் நீயிருப்பை; உண்மையிலேன் பாத்திரனோ ?

(13) வசிட்டதீர்த்தம்—ஆறெழுத்தை இயம்பி தன்மாட்டு ஆடினோர்க்கு ஊனமிலா ஞானத்தையும் உலகம் போற்றும் பெருமையையும் தந்தருளுவது இத்தீர்த்தம். இத்தகைய பெருமை வாய்ந்த வேறு தீர்த்தங்களையும் கொண்டு விளங்குவது அருணையம்பதி.

2. நதிகள்

(1) ஆறெழுத்தை ஓதி தம்மாட்டு ஆடும் அன்பர்களுக்கு அவரவர் எண்ணி விரும்பிய அனைத்தையும் இனிது அருளும் *புண்ணியநதி எனப் பெயர்கொண்ட நதியைக் கொண்டது அருணைமாநகரம்.

(2) கங்கை காவிரி முதலிய சபத கங்கையாம் நங்கையர் தம்மாட்டுத் தோய்ந்திட அவர்தம் குற்றங்கள் ஒழிந்து மேன்மை பெற உதவும் சோணகெங்கை என்னும் சிறந்த நதியுடன் பொலிவது அருணைமாநகரம்.

(3) பெருமானது இடது பாகத்தைப்பெற பார்வதிதேவி தவம் செய்தபோது, இறைவனது அபிடேகத்துக்குத் தீர்த்தம் வேண்டும் என்று தேவி விரும்பியபோது, குகமூர்த்தி (சேய்) வரவழைத்த சேயாறு என்னும் நதியுடன் பொலிவது அருணை மாநகரம்.

[*புண்ணிய ஆறு தெய்வமலைக்கு மேற்றிசையில் உள்ளது. இதன் அருகில் புண்ணிய ஆற்றூர் என்று ஒரு ஊர் இருக்கிறது.] —அருணாசல புராணம் (தீர்த்தச்சருக்கம் 21)

இசைமயமாம் அம்பிகைசேர் எந்தை!நினைக் காணும்
நசைமயமாய் உள்ளம் கலிவுறுதல் ஓராயோ? ...

நீயே சாக்ஷி ஐயப்பா !

(அன்பன்)

அரனை சாட்சி வைத்து நடத்துவது அரசாட்சி. ஆள்பவர்கள் இதனை அறிய வேண்டும். சிறிது பிறழ்ந்தாலும் இயற்கை சீறும்.

அந்தகன் என்பவன் ஒரு அசுரன். அவனுடைய கொடுங்கோல் எங்கும் கொக்கரித்தது. அதனால் வானம் வறண்டது. பயிர்கள் தேய்ந்தன. பசும்புற்கள் தீய்ந்தன. மரங்கள் கரிந்தன. பறவைகளின் இறகுகள் எரிந்தன. இரை கிடைககாமல் விலங்குகள் இறந்தன. நீரிலலை. நிற்க நிழலில்லை. எங்கும் பிணமயம். எனன வேதனை !

தாரு மரஙகள் நிறைந்த ஒரு காடு, தாருகாவனம் எனப் பெறும். ஏராளமான முனிவர்கள், அஙகு இருந்தனர். அருந்தபசிகள் அருந்த எதுவும் அகப்படாமல அவதி யடைந்தனர். புனித வனத்தை விட்டுப் புறப்பட்டனர். மனம் போன போக்கில் நடந்தனர். (தபஸ் - ஐந்து தீ நடுவிலிருந்து ஆற்றுவது; தவம் - உணர்வு மேலெழ நிமலனை சதா நினைக்கும் நிலை)

இடைவழியில் கவுதமர் ஆஸ்ரமம். தவமகிமையால், அவர் ஆஸ்ரமத்தைச் சுற்றிய சோலைகள் குளுகுளு நிழலைக கொடுத்தன. அந்த இடத்தில் முனிவர்கள் அடைக்கலம் புகுந்தனர்.

கவுதமர் அவர்களைக் கண்டார். கண் கலங்கினார். இந்த உலகமே அழியலாம். பாதகம் இல்லை. தவசிகள் வாழ வேண்டும். தவந்தான் உலகத்தைத் தாங்கும் என்பது அவர் எண்ணம். குவித்த கைகளால், அவர்களைக் கும்பிட்டு வரவேற்றார். ஆர்வம் காட்டி அணைத்தார். தவ சக்தியைப் பயன்படுத்தி, அந்த எண்ணாயிரம் முனிவர்க்கும் உரிய உணவை நாள்தோறும் உதவினார்.

பேயேன் உரைகள் பிதற்றாகிப் போகாமல்,
சேயின் மழலையெனச் செய்துகொண்டால் ஆகாதோ ?

தண்மைப் பொய்கை. நிழல்தரு சோலை. ஒவ்வொரு மரத்திலும், குலைகுலையாகக் காய்களும் கனிகளும் குலுங்குகின்றன. முனிவர்களின் நித்திய வேள்வி நிகழ்கிறது. குறையொன்றும் இல்லை. எல்லோரும் இன்பம் கொண்டு இருந்தனர். காலச சக்கரம் உருண்டது.

அரசன் அந்தகன் இறந்தான். அவனுக்குப் பின் நிலத்தை ஆண்டவன், அறநெறி வழுவாத ஒரு அரசன். அவன் செங்கோல் தருமம், மாதந்தோறும் மூன்று மழையை வரவழைத்தது. அதன் விளைவாகப் பயிர்கள் தலைகாட்டின. எங்கும் செழுமை எழுந்தது. பறவைகள் விலங்குகள் பல்கின. வண்மைப் பசுக்கள் வளர்ந்தன. குளிர்ந்தது மகிழ்ந்தது குவலயம்.

அதை முனிவர்கள் அறிந்தனர். தங்கள் தபோவனம் செல்லக் கருதினர்.

கடுந்தவசிகளான உங்கட்குச், சேவை செய்யக் காத்திருக்கிறேன். இங்கேயே நீங்கள் இருக்கலாமே என்று, விநயமாகக் கவுதமர் வேண்டினர்.

அன்புடைய அவர் சொற்களை, மறுக்க அஞ்சியது மனம். ஆயினும் தாருகாவன அபிமானத்தைத் தள்ளவும் முடியவில்லை. தர்ம சங்கடமா யிருந்தது.

ஏதாயினும் ஒரு பழியை எழுப்பி, அதன் வழியே பிரியமுள்ள இவரை விட்டுப பிரிய வேண்டும் என்ற இருண்ட எண்ணம் பிறந்தது. சுயநலம் இருந்தால் சூழ்ச்சிகள் உதிக்கும். அட பாவமே! என்ன சங்கடமான செய்தியிது!

மந்திர சக்தியால், ஒரு மாயப் பசுவை உண்டாக்கினர். அது, தட்டுத் தடுமாறி நடந்தது. முனிவர்கள், கண்டும் காணாதவர் போல நடித்தனர்.

ஒன்றி உணர்சயயம், கன்மம் உறுத்துமெனில்,
கன்றி, அதன் காழ்ப்படின கட்டறுத்தால் ஆகாதோ?

தசையே இல்லாமல் எலும்பும் தோலுமா யிளைத்த பசுவை, கவுதமர் கண்டார். கண்டதும் கண்கள் கலங்கின. அதைக் காப்பாற்ற வேண்டும் என்று கருதினர். தூய தம் கைகளால் அதைத் தொட்டார். அவ்வளவில் அது, துள்ளித் துடித்தது. துவண்டு விழுந்தது. அப்போதே இறந்தது. அது கண்ட கவுதமர் மனம் அதிர்ந்தது. அடபாபமே எனறு அலறினர். கண்மழை சிந்திக் கலங்கினர்.

ஆ! எனற அலறு குரல்கள், ஏக காலத்தில் எழுந்தன. திடுக்கிட்டுத் திரும்பினர்.

கோஹத்தி! கோவதை! பசுக்கொலே! பசுவைக் கொன்ற பாதக இடத்தில், இனி ஒருநாளும் இரோம் என்று, ஒருங்கு கூடிய முனிவர்கள் தாருவனம் நோக்கி ஓடினர்.

முனிவர்களின சொற்களும் செயல்களும், நெருப்பில் நெய்யிட்டது போல் அளவிலா வேதனையை அளித்தது. நடந்த சம்பவங்களை, ஒவ்வொனருகக் கவுதமர் எண்ணினர். மனம் கண்ணினர். உடனே அகமுகம் ஆனர். உணர்வுக் கண்களால், அநியாயச் சூழ்ச்சி இது எனறு அறிந்தார். அனபு செலுத்தியதற்கு இதுவா பயன என்று, அவர் இதயம் அழுதது. தபஸ்விகளை, தவசிகள் என்று எண்ணிய தவறு இது.

தவசிகள் பிழை செய்தால், அதற்கு எதிர்பபு எழுப்புவது ஆகாது; அவர்கள் பாவம் அவர்களோடு போகட்டும் எனறு ஆறுதல் கொண்டார். இச் சம்பவம், தம் நெஞ்சிலும் நிழலிடாத படி நீக்கினர். தவத்தில் கவனத்தைச செலுததினர்.

புனித கவுதமர் பொறுத்தார். எனினும் சீறி இயற்கை சிலிர்த்தது. தாருவன முனிவர்கள் தவவொளி, குறுகிச் சிறுகிக் குமைந்தது. அதனல், பாழும் இருள் அறிவில் படர்ந்தது. புத்திக்குத் தக்க பேச்சு; பிழையான செயல்களே அவர்களில் பெருகின.

தாய்காணுக் கன்ருய்த் தடுமாறும் என்முன்னர்,
வாய்மொழிதான் காட்டினை; வாழ்வுதந்தால் ஆகாதோ?

கடவுள் என்பது கட்டுக் கதை. நல்லது செய்வது நரர் தருமம். இது செய்தால போதும் என்பது மீமாம்ச மதம். தாருவன முனிவர்கள, இக் கொள்கையைத் தழுவினர். தாங்குவது தெய்வம்; தாங்கப் படுபொருள் ஆன்மா எனும் உயர்ந்த நினைவு ஒழிந்தது. மோசமான இக் கொள்கையை, முனிவர்கள் எங்கும் முழக்கினர்.

கணவனே கண்கண்ட தெய்வம்; அவனுக்கு மேல் ஒரு ஆண்டவன் இல்லை. இருக்கிறான் எனனும் செய்தி கேட்டு ஏமாறுகிறது உலகம்; இப்படி முனிவர்கள் மனைவியர் மொழு வினர். உடலுக்கு உரியவன கணவன. உயிரைக் காப்பது தெய்வம்; முனிபத்தினியர்கள் இடத்தில், இந்த நியதித் தருமம் நீங்கியது.

இவர்கள் பிரசாரத்தால், இறைவனே இல்லை என்ற பாவ நினைவு எங்கும் பரவியது. வளர்ந்தவர் கைகள வலுத்தன. கொதித்து லோகாயதம் குதித்தது. தோள் தட்டித தொடை தட்டும் அக்கப் போர்கள் எங்கும் அதிகரிததன. புனித நினைவிலார் செய்த புண்ணியங்களும், பாப ரூப பயங்கரம் ஆயின.

இயற்கை வடிவன் சிவபிரான். நம்பன அருளே நாரண ரூபம். எங்கும் எழுந்த பாபம் கண்ட அந்த இரு மூர்த்தங்களும், புண்ணியத்தை நினைவூட்டப் புறப்பட்டன.

சிவபெருமான கோவணம் கட்டிய பிட்சாடனர் ஆயினர். முகுந்த நாரணர் மோகினி ஆயினர்.

பிட்சாடனர் திருமேனியில், மின்னி யழகு மிளிர்ந்தது. அவரைக கண்ட முனிவர்கள் துணைவியர், மாபெரும் தம் கற்பை மறநதனர். இசசை மயமாகி எழுந்தனர். பிட்சாடனர், வடதிசை நோக்கி நடந்தார். பூவையர், அவரைத் தொடர்ந்து போயினர.

ஏற்றத்தாழ் வாயுலகை, ஏனபடைத்தான் என்பார்முன்,
சீற்றம் பிறப்பதன்றிச், செப்பேதும் இல்லையரோ.

மோகன ராகம் பாடியபடியே, முனிவர்கள் காண, தென் திசை நோக்கி மோகினி நடந்தாள். மாதின் அழகில் மாதவர் மயங்கினர். பாவையை நோக்கிப் பல்லிளித்தபடி, நலமிழந்த முனிவர்கள் தொடர்ந்து நடந்தனர்.

ஸ்காந்தம் போல்வது தெய்வம்; எந்த உயிர்களும் இரும்புகள். இரும்பைக் காந்தம் ஈர்த்தது. அளக்கும் கருவி ஆண்டவன்; அளக்கப் படுபொருள் ஆன்மாக்கள். இந்த இயற்கையை, இதுவரை எவரும் அறிந்திலர்.

குமுறியது வானம், கொக்கரித்தது பூமி. முனிவர்களும் அவர்கள் துணைவியரும், அது கண்டு அதிர்ந்தனர். அஞ்சிய மனநிலையில், அண்மையில் இருந்தாரை அரிவையர் நோக்கினர். சுயவடிவுடன நின்று, நகைத்தார் அந்த நம்பர். உண்மையை உணர்ந்து, நாணம் அடைந்த நங்கையர், குவித்த கைகளால் சிவத்தைக் கும்பிட்டனர். முனனே காமத்தால் உடல் கனன்றது; இபபோது கண்ணுதலை அவர்கள் ஆனமா காதலித்தது. கற்பின் ரகசியத்தை, அவர்கள் அப்போதுதான அறிந்தனர். இதுவரை ஏமாந்த தம் பிழை எண்ணி இடிந்தனர்.

உத்தம ஒழுக்கமுள்ள எண்ணுயிர முனிவர்கள், ஏக காலத்தில ஒருததியை நினைவது நியாயமா? என்று, இனிய குழலிசை போல எழுந்தது ஒரு குரல். அவ்வோசை, இதயத்தில் அறை விழுந்ததுபோல இருந்தது.

முனிவர்கள் ஏறிட்டு நோக்கினர். மோகினி யில்லை. நீலமேக நாராயணர்தான் எதிரில் நிற்கிறார். நாணியது மனம். நடுங்கியது உடல. திருவுருக் கரந்தார் திருமால். குற்றம் உணர்ந்து, கூனிக் குறுகி, தலை குனிந்தபடியே தவசிகள், தம்தம் ஆஸ்ரமம் நோக்கித திரும்பினர்.

உரிய கணவர்கள் வருகை யறிந்து, தலைவியர் நாணி ஒதுங்கினர். இஙகு நிகழ்ந்த சம்பவஙகளை, முனிவர்கள் தம்

புல்ஒன்று, வைக்கோல் புசிக்குமொனறு என்றமைந்த
வல்வினையின் ஆட்சி, வழியழிவ(து) இல்லையரோ.

இதயக் கண்களால் அறிந்தனர். மாபெரும் தம் குற்றங்களை மறந்தனர். அரன் செய்தது அக்கிரமம் என்று அலறினர். அனைவரும் ஒன்று கூடி ஆலோசித்தனர். தேவதேவனை அழித்துவிடத் தீர்மானித்தனர்.

அபிசார வேள்வியை ஆரம்பித்தனர். அதனில் எழுந்த ஒரு புலியை ஏவினர். பொருமி வந்த புலியை, உயிரொடு தோலை உரித்து, அரையில் கட்டினன் அத்தன். அடுத்து ஏதம் செய்ய வந்த மானையும் மழுவையும், கரங்களில ஏந்தினன். ஆக்ரமித்து வந்த பூத கணங்களை, சேனைகள் ஆக்கினன். மீசை முறுக்கி வந்த முயலகனை, அடியில் மிதித்து அடக்கினன். அக்கோலத்தில், அமலன் ஐந்தொழில் தாண்டவம் ஆடினன்.

முனிவர்கள் கண்டனர். அறியாமை இருள் அகன்றது. ஞானக் கண்ணனை, காமக் கண்ணன் என்று கருதிய தம் தவறை நினைந்து தளர்ந்தனர், ஹரஹர என்றனர். மாதேவரை இதுவரை மறுத்தோம். ஆதாரம் இல்லாத வாழ்வு ஆற்றோடு போகும்; அறிந்தோம் தெரிந்தோம் என்று அழுதனர். கலுழ்ந்த கண்ணீரால் தம் பாவத்தைக் கழுவினர்.

ஆஸ்திக ரகசியத்தை உயிர்கள் அறிந்து கொள்ள, ஆண்டவன் நிகழ்த்திய அருள் விளையாடல்களுள் இது ஒன்று. சிவமும் திருமாலும் வேறு வேறு அல்லர். சிலசில சந்தர்ப்பங்களில், ஒரு மூர்த்தம் இரு மூர்த்தமாகும். உலகிற்கு உதவ வெளிப்படும். இந்த உண்மையை எவரும் அறிய, அந்த இருவர் அமிசமாய் ஒருவர் உதித்தார். அவரை, ஐயப்பன் என்று வாழ்த்தி உலகம் வழிபடுகின்றது. சிவவிஷ்ணு அபேத நிலையை, ஐயப்பரே சாட்சியாக இருந்து அறிவிக்கிறார். ஐ என்பது, சத்தியின் நாமங்களுள் ஒன்று; அப்பர் என்பது சத்தரின பெயர். அடடா! என்ன அருமையான செய்தியிது!

மண்ணுலகின் விண்ணுலகின் வாழ்கின்றார் பலரோர்க்குக்,
கண்ணாய் என்பார், என் கண்ணிற்றல் செய்யாயோ ?

புலைமை எய்திய புலமை, எந்த வரலாற்றிலும் கயிறு திரிக்கும். (புலைமை - இழ்மைத் தன்மை.)

கனல் மயம் ஆனவர் கண்ணுதல் பரமர். எவர் சாபமும் அவர்மேல் ஏருது. பரந்தாமனையே சாபம் பாதித்தது என்று, அறிந்தார்போல் பொரிந்தார் ஒரு அறிஞர்.

தண்ணீர் நெருப்பைத் தணித்துவிடும். எங்கள் நாராயணர் ஜலமயம் ஆனவர். கன்மத்தைக் கழுவும் அவரை, சாபம் சார்ந்தது என்பது பாபம் என்று, சிவத்தை ஏளனம் செய்து இன்புறுவர் ஒரு சிலர்.

ஆஸ்திகம் என்றால் இன்னதென்றே அறியாத இவர்களின் வறண்ட யுக்தி வாதத்தை, பாமர உலகம் பாடம் செய்தது. மனம்நாற, தம் வாய்நாற, இவைகளை எங்கும் பேசி இடரடைகின்றது.

பலகாலம் "உணர்ந்து உணர்ந்து உணர்வினில்," "அறிந்து அறிந்து அறிவினில்" உறவு பூண்டார்க்கு, இரும்புண்ட நீர்போல் திரும்பாத வீடுதரும் இறைவன் அருள், தாருவன முனிவர்களை ஆண்டதுபோல், திருந்தா இவர்களையும் திருத்தி வைக்கும் என்று அமைதி யடைகிறது நமது மனம்.

வாழ்க சமரச வழிமுறை.

ஓம்.

அமிர்தவசனிக்கு, இந்த ஆண்டு சந்தா ரூபா மூன்றையும் அனுப்பி, பங்குனி மாதம் முடிய இதழ்களை மாதந்தோறும் பெற்று, படித்து, நலனடைந்து, ஏனையோர்க்கும் அன்புடன் வழங்கி, இன்புறுங்கள்!

அண்ணுவோ! எனறென்(று) அரற்றும் அடியேன்முன்
நண்ணுயோ? என்றுள்ளம் நைகினற்(து) ஓராயோ?

முருகன் அடியும் முடியும்

[கி. வா. ஜ.]

சிவபெருமானே உபதேசம் பெறுவதற்காக முருகனை வணங்கினுன் என்றுல் மற்றவர்கள் வணங்குவதைச் சொல்ல வேண்டாம். ஆனுல் அதில் ஒரு வேற்றுமை இருக்கிறது. சிவபெருமான் இரகசியமாக முருகனை வணங்கினுன். பரம இரகசியமாகிய உபதேசத்தைப் பெறுவதற்காகச் செய்த வணக்கம் அது. அது யாருக்கும் வெளிப்படையாகத் தெரியாதது. மற்றவர்கள் வணங்குவதோ, எல்லோரும் அறிந்தது; வெளிபபடையானது.

யார் யார் பணிகிருர்கள்? அவர்களுடைய பட்டியலைச் சொல்லிக் கொண்டு போனுல் அதற்கு எல்லையே இராது. ஆனுலும் ஒருவிதமாகச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணினுர் அருணகிரிநாதர். தேவர்களுக்குள் தலைவன் இந்திரன். அவனைவிடப் பெரியவன் பிரமன். அவன் மும்மூர்த்திகளில் ஒருவனுக இருந்தாலும், அவனைத் தேவனுக வைத்துப் பேசுவது மரபு. பிரமதேவன் என்று சொல்லுகிறேம் அல்லவா? அவன முதலாக இந்திரன், வாயு, வருணன், அக்கினி, யமன முதலிய எல்லாத் தேவர்களும் முருகனைப் பணிந்து தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுகிருர்கள். முருகனுடைய திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சுகிருர்கள். அவனுடைய திருவடியாகிய தாமரைப் பூவைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கொண்டு, தலைபடைத்த பயனைப் பெற்றுவிட்டோம் என்று பெருமை அடைகிருர்கள்.

வேதாமுதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா!

ஆளேநீ என்றழைத்து, அன்பிற் பணிகாட்டும்
நாளேதோ? நம்பா! நவின்றருளல் செய்யாயோ?

சிவபெருமான், 'நாதா, குமரா நம' என்று பணிந்தான். வேதா முதலிய விண்ணவர்கள் முருகன் பாதத்தைத் தம் தலையில் சூடிக் கொள்ளுகிறார்கள். இத்தகைய உயர்நிலையில் உள்ள ஞான குருமூர்த்தி இவற்றிற்கு மாறுபாடாகத் தோற்றும் ஒரு காரியத்தைத் செய்கிறான். எல்லோருடைய தலைகளும் இவன் காலில் இருக்கின்றன. இவன் தலை எங்கே இருக்கிறது ? ஒரு குறத்தியின் பாததில் இருக்கிறதாம் !

குறமின் பதசேகரனே !

முன்னாலே சொனன உயர்வுக்கும் பின்னாலே சொன்ன செய்திக்கும் உள்ள வேறுபாடு கொஞ்ச நஞ்சமா ? மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு என்று சொல்லலாகுமா? குன்றுக்கும் குன்றி மணிக்கும் உள்ள வேறுபாடு என்று சொல்லலாமா? அநத உவமைகள் எல்லாம் இதன் பக்கத்திலே வரமுடியுமா ?

சிவன் வணங்கும் பெருமான், பிரமன் முதலிய தேவர்கள் தம் தலையில் வைத்துக் கொள்ளும் திருவடியை உடையவன். தன் தலையில் குறமின்னின் பாதத்தை வைத்துக் கொள்கிறான் என்றால் அது மிகமிக இழிவான காரியமாகத் தோன்றுகிற தல்லவா ?

சிவன் முதலியவர்கள் முருகனைப் பணிவதும், முருகன வள்ளியைப் பணிவதும் ஒரே நிலையில் உள்ளவை என்று கொள்ளல் கூடாது. குழந்தையைத தலையில் வைத்துக் கூத்தாடுகிறோம். அது நம்முடைய இழிவைக் காட்டாது; அனபையே காட்டும். அவ்வண்ணமே முருகன் தடுத்தாட் கொள்ளும் பெருங்கருணைத் திறத்தைக் காட்டுவது, வள்ளி முன் அவன் பணிந்து நின்ற அருளாடல். தானே வலிந்து எளியனாகச் சென்று வள்ளியின் உறவை உண்டாக்கிக கொண்டான். மிகப் பெரியவர்கள் காண வேண்டு மென்று

ஓவாமல் உள்ளத்தால் ஓர்ந்தழைத்தல் ஓராயேல்,
சாவாமல் சாகும் சதுருடையன் ஆவேனே!

வந்து காத்து நிற்கும் ஒரு செல்வர் தமக்கு உறவினராகிய ஏழை ஒருவரைக் கண்டு நலம் செய்யத் தாமே அவர் வீட்டைத் தேடிச் சென்றார் என்றால் அதனை யாரும் இழிவாகக் கருதமாட்டார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு உயர்ந்த நிலையிலிருந்து மிகமிகத் தாழ்ந்து வருகிறாரோ அவ்வளவுக்கு அவ்வளவு அவருடைய பெருமை மிகுமேயன்றிக் குறையாது.

இங்கே குறமகள் அடியைத் தலையில் வைத்துக் கொள்கிறவன் என்று மட்டும் சொன்னால் முருகனுடைய எளிவரும் பெருங் கருணை ஓரளவு புலனாகும். அந்தக் கருணையின் அளவு பினனும் நன்றாக விளங்க வேண்டுமென்று, 'இவ்வளவு பெரியவன இவ்வளவு இறங்கி வந்தான்' என்ற முறையில் கூறினார் அருணகிரியார். சர்க்கஸ் வேடிக்கை காட்டும் இடத்தில் ஒரு குரங்கு நாற்காலியில் உட்கார்ந்ததானால் அதை வியப்பார் யாரும் இல்லை. ஆனால உடம்பை வளைக்க முடியாத யானை உடம்பை வளைத்துக் கொண்டு நாற்காலியில் உட்காருமானால் அதைக் காணற் கரிய காட்சி யென்று வியந்து வியந்து பாராட்டுவோம். அதே வகையில் மகா தேவனும் பிரம தேவனும் மற்றத் தேவர்களும் காலைப் பிடிக்கும் முருகன் என்று அவனை மிக உயரத்தில வைத்துவிட்டு, அத்தகையவன் வள்ளியின் காலைப் பிடித்தான் என்று சொல்லும் போது அவன் தன் கருணையை வள்ளிக்கு ஊட்டுவதற்காக எவ்வளவு தூரம் இறங்கி வந்தான என்பது புலனாகும்.

வள்ளிநாயகியைக் குறமின என்று சொல்கிறார். கொடி போல மெல்லிய உருவமும் மின்னல் போலத் தேசும் உடைய பிராட்டியாதலின் குறமின் என்றார். அதற்குமேல் ஒரு நயம் உண்டு. மின்னல் மிகமிகக் குறுகிய காலந்தான் நிற்கும். ஒரு கணத்தில் பளிசசிட்டு மறையும். வள்ளிநாயகி திருமாலின திருமகளாகத் தோன்றியவள். பிறகு எனறும்

தந்தை மனநதளர்ந்தார், தாயுமுடல் நோயினளால்;
வந்து பிறந்தேன், வழியறிய மாட்டேனே.

முருகனுடைய வலப் பக்கத்தை அகலாமல் இணைந்து வீற்றிருக்கும் பேறு பெற்றவள். இடைப்பட்ட குறுகிய காலத்தில் குறமகளாக இருந்தாள். முன் நிலைக்குரிய குறுங்காலத்தையும், பின் அமைந்த பெருநிலைக்குரிய நெடுங்காலத்தையும் பார்க்கும் போது, நிலவுலகில் குறவாணரோடு வாழ்ந்த சிறிதளவு காலம், அந்தத் தெய்வ அளவிலே ஒரு கணம் என்றே சொல்லத் தக்கது. கணநேரம் மட்டும் மின்னல் தோற்றுவது போலச் சிறிது காலத்திற்குக் குறமகளாக இருந்தாள் என்ற குறிப்பை உள்ளடக்கியே குறமின என்று சொன்னார். அந்தக் குறுகிய காலமும் பிரிந்திருக்கப் பொறாத முருகன் தானே வலியச் சென்று அடிவணங்கிக் காதலுறுவான் போல நடித்து அப் பெருமாட்டியை ஆட்கொண்டான்.

நாதா குமரா நமஎன்று அரனார்
ஓதாய் எனஓ தியதெப் பொருள்தான்?
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா, குறமின் பதசே கரனே!

[தலைவனே, குமரனே, உனக்கு நமஸ்காரம் என்று சிவபெருமான வணங்கி, எனக்கு உபதேசம் செய்வாயாக என்று விண்ணப்பிக்க, அப்பெருமானுக்கு நீ பரம இரகசியமாகச் சொன்னது எந்தப் பொருள்? பிரமன் முதலிய தேவர்கள் எல்லாம் தம் தலையின்மேல் அணிகின்ற மலரைப் போல விளங்கும் திருவடியை உடையவனே, குறமகளாகிய வள்ளி நாயகியின் பாதத்தைத் தலையில் வைத்துக் கொள்கிறவனே.

வேதா - பிரமன். சேகரன்-தலையை யுடையவன. சந்திரனைத் தலையிலே வைத்துக் கொண்டவனைச் சந்திர சேகரன என்பது போல, குறமின் பாதத்தைத் தன தலையிலேயே வைத்துக் கொள்கிறவனை, 'குறமின்பத சேகரனே!' என்றார்.]

இது கந்தர் அநுபூதியில் 36-ஆவது பாட்டு.

அல்லும் பகலும், அருளார் வடிவுடையாய்!
கல்லால் நிழற்காட்சி, காண அருளுதியே!

' அகரமுதலென '

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ.)

ஐம்பத்தொரு அட்சரம்—(16 பக்கத் தொடர்ச்சி.)

எழுதப் படுவது எழுத்து. புத்தகத்தில் உள்ள எழுத்துக்கள், உலகர் முயன்று உருவாக்கியவை. ஒருவர் மொழியை, வேறு மொழியினர் பெரிதும் விரும்பார். எவர் மொழி எழுத்தும், க்ஷரம் எனப் பெறும். அருணை முனிவர், அக்ஷரங்களைத்தான் அறிவிக்கிருர். (க்ஷரம் - அழிவு ; அ - இல்லை.) எனவே அநாதி நித்யமானது ; திசை, குலம், மதம், மொழிகளில் வேறு பட்ட எவர் அகத்திலும் இயல்பில ஒலிப்பது அக்ஷரம் எனப் பெறும். அந்த ' எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் ' என்கிருர் ஔவையார்.

அந்த அக்ஷரஙகளைச் சாதகர் அறிவர். அறியும் வழிமுறையும் எளியதுதான். திட முயற்சியே தேவை.

வழிவகை.

இயமம் :-கொல்லாமை, கள்ளாமை, பொய் சொல்லாமை; அதனுடன கண்ணும் காதும், நாக்கும் மூக்கும், ஆக்கையின் அறிவும் கண்டபடி விரயம் ஆகாமல் காப்பது.

நியமம் :- அரிய தத்துவ நூற்களில ஆய்வு ; பெற்றது கொண்டு பெருமகிழ்வடைதல்; இறைவழிபாட்டில் ஈடுபடுதல்.

ஆசனம் : இது பலவகை. அமரும்போதெல்லாம அவரவர் வசதிக்குத தக்கபடி சுகாசனம், அல்லது பத்மாசனம பழகுதல.

பிராணயாமம :- பிராண வாயுவை, மநதிர ஜபத்துடன் கட்டுப் படுத்தல.

பிரத்தியாகாரம் :- அகமனத்தைப் புறமனம் ஆகாதபடி அடக்குதல

பல்லா யிரகணங்கள் பார்ககமகிழ்ந் தாடுகின்ற
வல்லாளா! என்னை வலிந்திழுத்துக் கொள்ளாயே !

தாரணை :- அகத்தில் உள்ள குறித்த இடத்தில், பல நேரம் மனத்தை நிறுத்திப் பயிலுதல்.

தியானம் :- உபாஸனு மூர்த்தியின் உருவத்தை, ஊன்றிப் பாவித்து உணர்தல்.

சமாதி :- மூர்த்தியின் உருவும், உணரும் தொழிலும், உணரும் தானும் வேறுவேறு எனும் பேதம் இல்லாமல் அபேத நிலையைப் பழகல். இவைகளில தேர்ந்தவர்கட்கு, சிவயோகம் உடனே சித்திக்கும்.

(இந்த எட்டு அங்கங்களிலும், பழைய குருகுலம் மாணவர் களைப் பயிற்றியது.)

யோகநிலை.

பிராணவாயு உள்ளே புகுவதும், வெளியே வருவதுமாக ஊசல் ஆடுகின்றது. வெளியே வருநிலை ரேசகம் எனப்பெறும். வெளிப்பட்டு, நீண்டு மேல் நோக்கும் இதனை நிசுவாசம் என்பர்.

உள்ளே புகுவது பூரகம். உள் புகுந்து கீழ் நோக்கி ஓடும் அபான வாயுவை, உசுவாசம் என்று உணர்த்துவர்.

அபான வாயுவையும் பிராண வாயுவையும், மேலும் கீழும் விரையா வண்ணம் அடக்கும் நிலையை, கும்பகம் என்று யோகிகள குறித்துளர்.

இந்நிலையில, சுழுமுனை வழியே, புருவ நடுவில் மனம் லயப்படடு மகிழும்; அதனபின ஆதாரஙகளும் தெரியும்; அவை களின் அதிதேவதைகளும், தனித்தனியாகத் தரிசனம் தருவர்.

முதல் ஆதாரம் - மூலாதாரம்; இது, குதம் குறி யிரண்டற்கும் நடு இடம். இஙகே ஒரு முககோணம். அதனில் நான்கு இதழ்த் தாமரை. அதன இதழ்களில,

வ-ஶ-ஷ-ஸ எனும் நானகு அக்ஷர நாதங்கள் ஒலிப்பதை நாள்தோறும் கேட்கலாம். இந்த நாதலய முதல்வராய், விநாய கப் பெருமான் அத்தாமரை மேல வீற்றிருககிறுர்.

தென்தமிழால் உன்னைத தினம்பாடல்அலலாமல்,
என்னேநான் வேறு வழியறியேன் எம்மானே!

இரண்டாவது ஆதாரம் சுவாதிஷ்டானம் :- இதன் இடம் குறி மூலம். அங்கே உளது அறுகோண ரூபம். அக்கோணத்தில் ஒளிமயம் ஆனது ஆறிதழ்த் தாமரை. அதன் இதழ்களில்,

ம்ப-ப-ம-ய-ர-ல் எனும் ஆறு அக்ஷர நாதங்கள் ஒலிக்கின்றன. பிரியத்துடன் இந்தக் கமலத்தில் பிரமதேவர் இருக்கின்றார்.

மூன்றாவது ஆதாரம் மணிபூரகம். இதன் இடம் நாபி. இங்கு மூன்று கோணம் ஊன்றியுளது. அதனில் இரத்தின ஒளி போன்ற பத்து இதழ்களை யுடையது ஒரு தாமரை; அதன் இதழ்களில்,

ண்ட-ட-ண-த-த்த-த-ந்த-ந-ப-ப்ப-எனும் பத்து அட்சர நாதங்கள், என்றும் இடையறாது எழுகின்றன. அக்கமலத்தில், இன்பராக நாராயணர் எழுந்தருளி இருக்கிறார்.

நான்காவது ஆதாரம் அநாகதம் :- இதற்கு இடம் இதயம்; அங்குப் பன்னிரண்டு இதழ்த் தாமரை; அந்த இதழ்களில், க-க்க-கு-ங்க-ச-ச்ச-ஜ-ஜ்ஜ ஞ-ஞ-ட ட்ட-எனும் பன்னிரண்டு அக்ஷர நாதம் சதா படபடக்கின்றது. அக்கமலத்தில் அமர்ந்து, உயிர்களை இளைப்பாற்றுகிறார் உருத்திரர்.

ஐந்தாவது ஆதாரம் விசுத்தி :- இதற்கு இடம் கண்டம். இங்கு அறுகோணம் ஒன்று இருககிறது. இதில் வெண்ணிறமான பதினாறிதழ்த் தாமரை. அதனில்,

அ-ஆ-இ-ஈ-உ-ஊ-ரு-ரூ-லு-லூ-ஏ-ஐ ஓ-ஔ-அம்-அஃ— எனும் பதினாறு அக்ஷர நாதங்கள் பலிக்கின்றன. இதனில் மகேஸ்வரர் இருக்கிறார்.

ஆறாவது ஆதாரம் ஆக்ஞை :-இதற்கு இடம் புருவ நடு. இதனில் இரண்டு இதழ்ச் செந்தாமரை இருக்கிறது. இதனில்,

---

எறும்பிற்கும் பேறளித்தாய் என்பர்; அது மெய்யேல்,
குறும்பகற்றி என் மனத்தைக் கோயிலாகக் கொள்ளுதியே!

ஞ-க்ஷ எனும் இரு அக்ஷர நாதங்கள் எழுகின்றன. இதனில் சதாசிவர் இருக்கிறார்.

இந்த ஆதாரங்கள் ஆறனையும் ஆஸனமாக் கொண்டு, அவைகட்கு மேற்பட்ட பிரமரந்திர உச்சியில், ஆயிரம் இதழ்த் தாமரைமேல், தங்கி இருப்பது பரமசிவம்.

இந்த அட்சர நாதங்கள் ஏக காலத்தில் ஒலிப்பதை, உள் முக யோகிகள் உணர்ந்து உருகுவர்; இவைகளை மாத்ருகா மந்திரம், மாலா மந்திரம் என்றும் அன்புடன் அவர்கள் அறிவிக்கின்றனர்.

"ஐம்ப தெழுத்தின அடைவை அறிந்தபின்
ஐம்ப தெழுத்தே அஞ்செழுத்தாமே"

என்று தெரிந்து கூறுகிறார் திருமூலர்.

அகத்தில் எப்போதும் இயங்கும் நாதமே உயிர் அகரம். அந்த அகரநாதம், பல்வேறுவகையான அக்ஷரங்கட்கு எல்லாம் முதல்.

"அறையும் அக்கரங்கள் தோறும்,
சென்றிடும் அகரம்போல நின்றனன் சிவனும்"

எனும் சிவஞான சித்தியார் பிரமாண இயல், இங்கு சிந்திக்கத் தகும்.

எழுத்துகள் தொகையானால் ஓம்; வகையானால் அ-உ-ம்-விந்து-நாதம்: விரியானால், சொல்லுலகமான எல்லா நூலுமாம்.

அகங்காரம் - புத்தி - மனம் - சித்தம் - உள்ளம் என்னும் அந்தக்கரணம் ஐந்தும் ஜடம். அக்கருவிகளுள்,

அகரம், அகங்காரத்தை உடனிருந்து செலுத்தி அறிவூட்டும்.

சித்தர்கள் சிந்தை சிரிக்கவினை யாடுகின்ற
அத்தா! என் முன் உன் அருள்கனைய்க் காட்டாயோ?

உகரம், புத்தியை உடனிருந்து இயக்கி உணர்வூட்டும்.
மகரம், மனத்திற் கலந்திருந்து மனனம் செய்விக்கும்.
விந்து, சித்தத்திற் சேர்ந்திருந்து சிந்திக்கச் செய்யும்.
நாதம், உள்ளத்தில் உறவாடி உவகையை விளைவிக்கும்.

அகரம் எனும் ஓர் எழுத்து, அ-உ-ம்-விந்து-நாதம் என, மேற் சொன்ன கரணங்களை இயக்குவதற்காக ஐந்தாகப் பிரியும்; பிரிப்பின்றி நின்றால், ஓம் என்று ஆகும். மேலும் விரிந்தால் 51 அட்சரங்கள் என்று அமையும்.

கடலின் அலைகள், புதிது புதிதாக எழுந்து இயங்கி ஒடுங்கி வருவதுபோல், சொல்லுலகமான எழுத்துக்கள், உயிரின் உணர்வு மாறி மாறித் தோன்ற உதவுகின்றன.

சுத்த மாயையில் ஐந்து கலைகள், உயிர்கட்கு விடுதலை யளிக்க விரைகின்றன. 1. நிவிர்த்திகலை - பந்த விடுதலைக்கு வழிகாட்டும் ; 2. பிரதிட்டாகலை - விடுதலையை அணுகிய தென்று பதிவு செய்யும் ; 3. வித்யாகலை—ஞானம் அளிக்கும்; 4. சாந்திகலை-அமைதியை யளிக்கும் ; 5. சாந்தியாதீதகலை- அமைதிக்கு மேற்பட்ட அனுபவத்தைக் காட்டும். கலை என்பது, பிரிவு எனும் பொருளது.

நிவிர்த்திப் பகுதியில் பிரமதேவர் நிற்கிறார். அகரத்தை இயக்குகிறார் ; அகரம் அகங்காரத்தை இயக்குகிறது.

பிரதிஷ்டைப் பகுதியில் நாராயணர் இருக்கிறார் ; உகரத் தை உந்துகிறார். உகரம் புத்தியை ஊக்குகிறது.

வித்யா எனும் பகுதியில் உருத்திரர் உளர் ; அவர் மகரத்தை இயக்குகிறார் ; மகரம் மனத்தை மனனம் செய்யப் பண்ணுகிறது.

வீட்டினிருள் நீக்கும் விளக்குப்போல், இவ்வுடலக்
கூட்டில் ஒளிப்பெருக்கைக் கூட்டுவித்தால் ஆகாதோ ?

சாந்திப்பகுதியில், மகேஸ்வரர் சார்ந்துளர்; அவர் விந்து எனும் ஒளித்தத்துவத்தை ஊக்குகிறுர். சித்தத்தை, விந்து சிந்திக்கச் செய்கிறது.

சாந்தீயாதீதப் பகுதியில் சதாசிவர் உளர்; அவர் நாத தத்துவத்தை நடத்துகிறுர். உள்ளத்தை, நாதம் ஊக்குகிறது.

அந்தக்கரணம் ஐந்தும், ஐந்து எழுததுக்களும், எழுத்துக் கட்குரிய அதிதெய்வங்கள் ஐவரும் எனும் இப் பதினைந் தொடும் பொருந்தி, ஆன்மா எதையும் அறியும்; எதையும் செய்யும்.

ஆன்ம பரிபாகத்திற்குத் தக்கபடி உதவ, ஒரு மாயையே மூன்ருக உருவம் கொண்டது.

ஒன்று சுத்த மாயை, அடுத்தது அசுதத மாயை, அதன் கீழது பிரகிருதி மாயை.

சுத்த மாயையில் சுத்த தத்துவம் ஐந்து. மேல் சொன்ன கலை ஐந்து. அதனுடன், சூக்குமை - பைசந்தி - மத்திமை - சூக்குமவைரி - தூலவைகரி எனும் 5 வாக்குகளும் இருக் கின்றன.

அவ்வாக்குகள்தான், 'அகரமுதலென உரை செய் ஐம்பத் தொரு முதலட்சரங்களை, சார்பு அட்சரங்களை, எவர் கண்ணும் செவியும் காணச் செய்தன; செய்கின்றன. அவ்வளவுதாளு!

அந்த 51 அக்ஷரங்களிலிருந்து, எண்பத்தொரு பதங்கள் எழுந்தன. எழு கோடி மந்திரங்கட்கு இடமான பதினெரு மந்திரங்கள் பலித்தன.

மாயை அளித்த மனத்தைத் திருத்துதற்கு
வாயால் ஒருசொல் வழங்குவதும் ஆகாதோ?

சுத்த மாயா கலைகள் ஐந்துடன், அசுத்த மாயையில் கலை என்றே ஒரு தத்துவம் உளது; அது உடுக்கை போல்வது; உடுக்கை ஒரு புறம் கருமை, ஒரு புறம் ஒளிமயம். காலதத்து வத்தில் எச்சரிக்கையா யிருநதால் ஒளிமயம் ஆகலாம்; அஜாக்கிரதை யானல், இருளில் வீழ்ந்து இடரடைய நேரும். பிரகிருதி மாயை, கலையிலிருந்தே பிறந்தது.

பிரகிருதி மாயையில் மருத்து நூல், பரகாயப் பிரவேசம், கஜநூல், குதிரை நூல் முதலிய 64 கலைகள் உள; லோகா யத மயமான பெண்மை உறவிலும், 64 கலைகள் இருக்கின் றன. ஏன் இவைகள் இப்படிப் பெருகின. இறைவா! எல்லாம் நின் அருளால எழுந்தவை. அதன் காரணம், அடியேன் அறியுமாறு இல்லையே!

அவைகள் அடியேற்கு விளங்குமாறு விளக்கி யருளும் என்பார், "அகரமுதலென உரைசெய் ஐமபந்தொர் அக்கரமும் அகில கலைகளும்—இனிது உணர்த்தி அருள்வாயே!" என்று விநயமுடன அருணகிரிநாதர் விண்ணபபிக்கிறர். இனி அவர் கூறும் தத்துவம் தொண்ணூற்றுறையும், பிற பகுதிகளை யும் அடுதத இதழில் சந்திபபம்.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் பயிண்டு செய்தன 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1 வீதம் அனுப்பவும்.

வாசிவா என்றே வழுத்தும் எளியேன்முன்
நீசிவா வந்து நிறைவுறுத்தல் செய்யாயே!

Beatitude of benediction and grace, and parallelism of might and prowess.

These great attributes of divine significance furnish the feast of spiritual enjoyment to the devotees of Sri Skanda in their celebrations of Sri Rama Navami. The ordinary human birth of Sri Ram and the wonderous divine manifestations of His spiritual might and His universal love and all-pervading benediction made Kambar exclaim the human birth as the best approach and the holiest of births in the soul's flight to the immortal. His bow and arrow are the physical representations of His psychic (athmic) strength and to think of them and to meditate for a few seconds, are the spiritual weapons of His devotees to restore peace of mind and to regain doughty courage and dauntless resistance to meet and destroy the powers of darkness and blight, when they seek to distress mankind. His humility and accessibility to all, particularly to the devotees Sri Sabari and Sri Akalya, His friendship with Guha and Sugriva, His later kindness and consideration to Vali, His soulful attachment to Anjaneya the present living prototype of Rama who had since become Brahman of

the Upanishads, His soulful benediction to Mandodari for whose coming to the battlefield, Sri Rama waited alone by Himself to bless her, and a thousand other incidents where His blessings to erring humanity were strewn in unstinted abundance unasked for, mark out how unbounded love for humanity made him the unconquered hero against all enemies of mankind, caste, position, power, pelf and what all else counts for differentiation and discrimination, are no obstacles to the free flow of love to all life; for love is divine. Man behoves to become divine, first by love uuiversal, before he can become worthy of the Lord. The great Sri Sadasiva Brahmendral says that great Sri Rama plays in the hearts of those who realise "Vasudeva Sarvamiti." Rama was the same and is the same as Vasudeva, but only an earlier edition. Now there are as many editions of Vasudeva as there are genuine bhaktas *i. e.* those who do Bhajan in the full thought of the Supreme everywhere. The parallelism is complete with Sri Skanda. If Rama was the son of man, Skanda is the son of God. It is God becoming Man to save mankind in Rama. It is God Muruga born as God to save man and the universe. Inspite of His divine birth,

Lord Skanda grew up as man, wended his weary way to Sri Valli to claim her as His property. No life is, if not the property of the Lord. Where this feeling does not inspire, man's troubles are endless, created by himself inspite of the Lord's universal hand of love and help. The passions and sins of man represented by the Asuras are destroyed by the might of His great Vel answering the bow of Rama. The annihilation of the Asuras, devilish qualities in man, and their working clears the royal road for humanity for the ultimate union or marriage with God.

In the Ramayana, Sita born of earth, out of earth and in the earth is relieved and gets blessed by union with Rama—God-head, having been brought up by a king. In the Skanda, Valli, of the lowest of the low castes, born out of earth, brought up by a hunter is sought after by Skanda of immeasurable grace, and Valli and Skanda become one. They are the world mothers. To know they are the world mothers, is the unerring step to ascend towards universal love. When that is attained, mankind attains the unity with the Immortal and the Universal.

Om Om Om

—*Thiruppugal Mani.*

அமிர்தவசனி பிரசுரங்கள்

54, பந்தர் தெரு, சென்னை-1.

குகஸ்ரீ ரசபதி அவர்களின் விரிவுரையுடன்

அரிய அருள் நூல்கள்		ரூ.	நயா பை.
கந்தரநுபூதி	(விரிவுரை)...	1	25
திருவகுப்பு (6 மட்டும்)	,, ...	1	50
திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்	,, ...	2	00
கந்தர் கலிவெண்பா	,, ...	2	00
திருக்கயிலாய ஞானவுலா	,, ...	2	00
விநாயகர் அகவல் (ஔவையார்)	,, ...	1	50
கோளறு பதிகம்	,, ...	0	40
சண்முக கவசம் (பாம்பனடிகள்)	,, ...	0	60
திருப்புகழ்மாலை (360 பாடல் மட்டும்).	...	1	25
கந்தக்கதம்பம் (பாடல்மட்டும்) 288 பக்கம்.	...	1	25

தபோவனப் பதிப்பக நூல்களும் அனுப்ப இயலும்.

அமிர்தவசனி சந்தாதாரர்க்கு வேண்டுகோள்

சித்திரையீ முதல் பங்குனி முடிய வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருட சநதா ரூ. 14. அனுப்பவும். வி. பி. இலலை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுபபினுல் தொடர்ந்து பததிரிகை கிடைக்கும். வருட நடுவில் சநதாச செலுத்தினுல், சிததிரையீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின், சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்வம்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

புகழாரும் நின்றன் அடியார் இழைத்த
புன்மை தவிர்க்கும் புனித
மகிழாரும் ஒற்றிப் பதிமேவி அன்று
மகிழ்தூது சென்ற மறையோய்!
இகழ்வாரும் வேறு சமயம் புகுந்தே
இடராழ்ந்தி டாதரு ளுவோய்!
திகழ்பாதம் போற்ற அருள்தேவ தேவ!
திருவாலங் காட்டு மணியே!

No.1506
அசோகா
ASOKA
நெ.1506

-104-

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.
MADRAS.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பினயில்
(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும் :
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3.
டெலிபோன்: 33982

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள் :
பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால்,
தயை கூர்ந்து குரோதி வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி
ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.
அமிர்தவசனி காரியாலயம் 8, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 8, Bunder Street, Madras-1.